மலர் 11

இதழ் 3

[உளவியல் மஞ்சரி]

விலை: 3/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்

உளவியல் மஞ்சரி

இதழ் 3
மலர் 11

வைகாசி - ஆனி
1985

" நான் வளர்ந்தால் நாம் வளர்வோம் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்;

வின்சன்ற் பற்றிக் O.M.I.,B.A.

இணை ஆசிரியர்.

S. டேமியன் O. M. I., M. A.

துணை ஆசிரியர்கள்.

ராஜன் மங்களா
ஜோசப் பாலா
ஜீவனதாஸ்
நீக்கிலஸ்
S. வசந்தரூஜ்

தொடர்பு:-

F. L. N. குரூஸ்
லொசிங்ரன்
வலன்ரைன்

விநியோகம்:

அற்புதராஜ்
B, யூட் குலேந்திரன்
சத்திய சீலன்
L. கிறேஷன்

விளம்பரம்;

S. K ஜெசாய்ரூ
இம்மானுவல்

முகவரி

"நான்"
அ, ம. தி. குருமடம்
கொழும்புத்துறை.

அடுத்து வெளிவருகிறது!

"வெறி"

உங்கள் ஆக்கங்களை
20-6-85க்கு முன்
அனுப்பி வையுங்கள்

உள்ளே

பிரிவின் மறைவில் உறவின்
வெளிப்பாடு.
ஆண்களை ஒருநாள் அனுதை
ஆக்குவோம் [கவிதை]
மௌனங்கள் கலையும் போது
3 (தொடர்)
உளவியல் தேர்வு
கண்ணீர் பூக்கள்
(சிறுகதை)
பிரிவும் அதற்கான
காரணங்களும்
(கட்டுரை)
கருத்துக்குவியல்
குறுக்கெழுத்துப்போட்டி
நான் பதில்கள்

இனிவர இருப்பவை

மலர் 11 இதழ் 4 வெறி
மலர் 11 இதழ் 5 தாழ்வுமனப்பான்மை
மலர் 11 இதழ் 6 எதிர்ப்பார்ப்பு

சந்தா விபரம்;

| | |
|---|---|
| ஈராண்டு சந்தா | ரூபா 28-00 |
| ஓராண்டு சந்தா | ரூபா 15-00 |
| வெளிநாட்டு சந்தா | U S $ 7 |

பணம் பெறும் கந்தோர்
கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதையும் தாங்கும் இதயம்

"இரவும் பகலும் இரண்டானால்
இன்பம் துன்பம் இரண்டானால்
உறவும் பிரிவும் இரண்டானால்
உள்ளம் ஒன்று போதாது"

— என்று பாடுகின்றான் ஒரு கவிஞன்.

உறவில் ஏற்படும் இன்பத்தை அனுபவிக்கும் உள்ளம் பிரிவில் ஏற்படும் துன்பத்தைத் தாங்கமுடியாது தவிக்கின்றது. பிரிவு இப்படித் துயரத்தைத் தரும் என்று தெரிந்திருந்தால் நாங்கள் ஆரம்பத்தில் உறவு கொள்ளாமலே இருந்திருக்கலாம், என்று எண்ணத் தோன்றும் அளவிற்கு பிரிவின் வேதனை ஆழமானதாகக் காணப்படுகின்றது.

உறவில் இன்பம் காணும் ஒவ்வொருவனும் பிரிவையும் அனுபவித்துத்தான் ஆகவேண்டும். பிரிவின் துயரில்தான் உறவின் நெருக்கம் உணரப்படுகின்றது. நெருக்கமான உறவுகளைத் தொடர்ந்து வரும் பிரிவு மனிதனை உளரீதியாகவும் சிலவேளைகளில் உடல்ரீதியாகவும் ஊனப்படுத்தி விடுகின்றது. இதன் விளைவுகள் பாரதூரமானவையாக அமைவது அன்றாட வாழ்வில் ஏற்படும் அனுபவங்களிலிருந்து புலனாகின்றது. பிரிவின் கொடுமையைத் தாங்க முடியாததால் தற்கொலைகள் உடல்-உள நோய்கள், வாழ்க்கையில் பிடிப்பற்ற போக்குகள், வாழ்க்கையை நொந்து கொள்ளும் தன்மைகள் போன்றன நாளுக்கு நாள் அதிகரித்து வருவது பரிதாபகரமான இன்றைய சூழலை எடுத்துக்காட்டுகின்றன.

எனவே, வேதனையான நிகழ்வுகளிலிருந்தும் சாதனையை நிலைநாட்ட துயரமான சம்பவங்களிலிருந்தும் மனமகிழ்ச்சியினைத் துளிர்விக்க, பிரிவு தரும் அனுபவங்களிலிருந்தும் மனித உறவினைப் பலப்படுத்த எதையும் தாங்கும் இதயத்தினை உதயமாக்குவோம்; எழிலான உலகம்தனை உறவில் காணுவோம்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உறவும் பிரிவும்"

மொட்டவிழ்ந்து மணம் பரப்பும் ஓர் நிகழ்வு உறவெனில் - எமைத்
தொட்டதுமே முள்ளாகக் குத்தி நிற்கும் பிரிவு.
வளர்நிலவு பூரணமாய் ஆவதுதான் உறவெனில் - அது
தேய்ந்து மறைந்து விடும் ஓர் நிகழ்வு பிரிவு
தென்றலெனத் தீண்டிவருமோர் நிகழ்வு உறவெனில் - எமைத்
தீயெனவே பொசுக்கி விடும் ஓர் நிகழ்வு பிரிவு
வண்டெனவே நாடிவரும் ஓர் நிகழ்வு உறவெனில் : பூச்
செண்டில்தேன் தீர்ந்ததுமே உடன் நிகழும் பிரிவு.
தீபச்சுடர் ஒளி வழங்கும் ஓர் நிகழ்வு உறவெனில் - நெய்
தீர்ந்ததுமே சுடரணையும் ஓர் நிகழ்வு பிரிவு.
கடலோடு அலைசேர்ந்து- ஓர் நிகழ்வு உறவெனில் - அது
கரை சேர்ந்தால் உருவாகும் ஓர் நிகழ்வு பிரிவு.
அழகு கண்டு அன்பு கொள்ளும் ஓர் நிகழ்வு உறவெனில் - எம்
அங்கமொன்றில் குறை வருங்கால் உடன் நிகழும் பிரிவு.
இனிமை தரும் இணைவினிலே உருவாவது உறவெனில் - எமைத்
தனிமைக் கொடும்பிடியில் தவிக்க வைக்கும் பிரிவு.
சொந்தம் பந்தம் சொர்க்கசுகம் தருவதுதான் உறவெனில் - எமக்கு
சோகம் தாகம் பக்கத்துணை ஆவதுதான் பிரிவு.
அன்பு வடிவு, இன்பம் தரும் ஓர் நிகழ்வு உறவெனில் - அதை
அனுபவித்தே சலிக்க வைக்கும் தலையெழுத்து பிரிவு.
தொடர்கதையாய் உள்ளங்கள் சங்கமிப்பது உறவெனில் - அது
விடுகதையாய் முடிவு பெறும் நிலை வரும்கால் பிரிவு. (வரும்)
வாழ்க்கையெனும் நாடகத்தில் நடிகர்கள் உறவெனில் - காட்சி
மாற்றமேதும் உண்டானல் உருவாகும் பிரிவு.
பூமிக்கு வரும்போது ஒருத்தியோடு உறவெனில் - நாம்
பூமி விட்டுப் போகும்போது பலரோடு பிரிவு.
வரவிருந்தால் செலவிருக்கும் வாழ்க்கை நியதி - எமக்கு
உறவிருந்தால் பிரிவிருக்கும் உலக நியதி.

பரிசு பெறுபவர்:- **துளசி தி. சம்பந்தன்,**
யாழ் - திருக்குடும்ப கன்னியர்மடம்

பரிசு தருபவர்:- **"Sayons Bake House" Passaiyoor**

பாராட்டுவோர்;- **நயினைகுலம், மஞ்சுளா யோகசவ்,**
**ரூபன்மரியாம்பிள்ளை, சிவஞானம் ஜெயசங்கர்,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவின் மறைவில் உறவின் வெளிப்பாடு

— ஜீவனதாஸ் பெர்னாண்டோ (B. A. Hons) —

ஒவ்வொன்றையும் நன்றாகப் பார்க்க அல்லது நன்றாக விளங்கிக் கொள்ள அதற்கான இடைவெளிகள் வேண்டும்.

சில சமயம் அது காலத்தின் இடைவெளியாக இருக்கலாம். சில சமயம் அது தூரத்தின் இடைவெளியாக இருக்கலாம்.

அந்த வகையில் உறவினைப் புரிந்து கொள்ள பிரிவின் இடைவெளி தேவைப்படுகின்றது. எனினும் இதற்குக் காலத்தின் இடைவெளியா அல்லது தூரத்தின் இடைவெளியா அவசியம் என்பது இன்னும் புரிந்து கொள்ளவில்லை. இருப்பினும் தூரத்தின் இடைவெளியை விட காலத்தின் இடைவெளியே உறவினையும் பிரிவினையும் புரிந்து கொள்ள உதவியாக இருக்கிறது.

பிரிவு என்ற சொல்லை வார்த்தைகளால் வரை விலக்கணப் படுத்த முடியாது. அது கடினமானது. பிரிவு என்பது ஒவ்வொருவரும் அனுபவிக்க வேண்டிய உணர்ச்சி வெளிப்பாட்டு நிலை. இந்தப் பிரிவு என்ற நிலையானது தனிமனிதனுள்ளே இருக்கலாம்; மனிதனுக்கும் மனிதர்களுக்கும் இடையில் இருக்கலாம். மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையில் இருக்கலாம். இந்தப் படிமுறை வளர்ச்சி இறுதியில் நாட்டிற்கும் நாட்டிற்கும் இடையில் உள்ள பிரிவு நிலை என்பதில் முடிவடையலாம்.

மேலும் இப்படித்தான் பிரிவு இருக்க வேண்டும் என்று கோடிட்டு காட்ட முடியாது. அது வாழ்க்கை அனுபவங்களில் அல்லது அதனூடாக பிரயோகிக்கப்படும்போது உணரப்படுகின்றது. பிரிவினை இரண்டு வகையாகப் பிரித்துப் பார்க்கலாம்.

(1) நிரந்தரப் பிரிவு
(2) தற்காலிகப்பிரிவு

உறவு என்பதே இல்லாதவிடத்து அதனை நாம் நிரந்தரப் பிரிவு என்று கூறுகிறோம். இந்த நிலையில் உறவு என்பது அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியமற்றுப் போகிறது. இந்த நிரந்தரப் பிரிவுக்கு யார் காரணம், இது எமக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கிறது. இதற்கான விடையை ஆராய முற்படும் போது எழிலனின் கல்லறைப் பூக்களில் உள்ள கவிதையை சுட்டிக்காட்டலாம்.

"உன் கையில் மனித உயிர்
விளையாட்டுப் பொம்மையடா
என்றைக்கும் நீ உடைப்பாய்
அது உன் விருப்பமடா"

மனித வாழ்க்கையில் உயிர் துறந்து பிரிந்துவிடும் நிலையைத் தான் நிரந்தரப் பிரிவாக கணித்துப் பார்க்கின்றோம். உயிர் பிரிதல் என்பது எமக்கு அப்பாற்பட்ட, விளங்கிக் கொள்ள முடியாத விடயமாக இருக்கிறது. இதனால் இதனை விடுத்து நிரந்தரப் பிரிவினை ஏற்றுக் கொள்வதற்கான மனப் பக்குவத்தினை வளர்த்துக் கொள்வதே எமது கடமை, இருப்பினும் இந்த நிரந்தரப் பிரிவின் முடிவுதான் என்ன? இதன் அடுத்த நிலைதான் என்ன? இங்குதான் ஞானிகள், சமயப் பெரியார்கள் தங்கள் செல்வாக்கை செலுத்துகிறார்கள். இந்த நிலையினை ஆராயும் போது கல்லறைப் பூக்களின் இன்னுமொரு கவிதையினை சுட்டிக் காட்டக் கூடியதாக இருக்கிறது.

"மரணத்தின் மர்மக்கதை
முடிவுதான் தெரியவில்லை
இறந்தவர்கள் எல்லோரும்
அனுபவத்தைச் சொல்லவில்லை." இப்படி

யாக நிரந்தரப் பிரிவு என்பது சூனியமாகவே இருக்கிறது.

உறவு என்பது திரும்பவும் செம்மைப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் அல்லது வளர்க்கப்படுவதற்கான சந்தர்ப்பங்களில், பிரிவுநிலை ஒன்று இருக்கும் போது அது தற்காலிகப் பிரிவு நிலையினை சார்ந்ததாக இருக்கிறது. இதனை நாம் இரண்டாகப் பாகுபடுத்திப் பார்க்கலாம்.

(1) விளங்கிக் கொள்வதன் மூலம் ஏற்பட்ட பிரிவு
(2) விளங்கிக் கொள்ள முடியாமையின் மூலம் ஏற்பட்ட பிரிவு

விளங்கிக் கொள்ளலில் ஏற்பட்ட பிரிவு என்பது பொறுப்பு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அடிப்படையில் ஏற்படுகின்றது. இந்த நிலைப்பிரிவுவகை வாழ்க்கையின் முன்னேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் கருதி ஏற்படலாம். கடமையின் நிமித்தம் ஏற்படலாம் மருத்துவம் போன்ற கட்டுப்பாடுகளின் மூலம் ஏற்படலாம். உயர் கல்வியின் நிமித்தம் வெளிநாட்டிற்கு செல்லும் மாணவன் தன் குடும்பத்தினைப் பிரிந்திருக்கும் நிலையினை உதாரணமாக கொள்ளலாம். இங்கு இது தற்காலிகப் பிரிவாக இருந்தாலும் விளங்கிக் கொள்ளலின் ஊடாகவே செயற்படுத்தப்படுகின்றது.

தற்காலிகப் பிரிவில் இரண்டாவதாக கூறப்பட்ட பிரிவு வகை வாழ்க்கையில் சந்தேகம், நம்பிக்கையின்மை, எதிர் பார்ப்பு மழுங்கடிக்கப்படல் போன்ற தன்மைகளினுல் ஏற்பட லாம். இது தவருக விளங்கிக் கொள்ளல் அல்லது சரியாக விளங்கிக் கொள்ள முடியாமை என்பதன் நிமித்தம் ஏற்படுகின் றது. மேற்கூறப்பட்ட நிலை அகற்றப்பட்டால் பிரிவு என்ற நிலை ஏற்படாது. இந்தப் பிரிவு நிலையால் தான் குடும்பம் பண்பு நட்பு என்பன சீரழிக்கப்படுகின்றன. ஆகவே எல்லாவற்றை யும் நன்ருகப் புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்ளும் தன்மை மனிதனுக்கு அவசியம் தேவைப்படுகின்றது.

உறவு, பிரிவு என்பன தனித்தனிச் சொற்களாக இருந்தா லும் இவை இரண்டும் கலந்து இருக்கும் போது அல்லது இரண் டினையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போதுதான் இரண்டினது அர்த் தங்களும் வெளிக் கொணரப்படுகின்றன. உறவின் பூரணத்து வத்தினை சரியாக விளங்கிக் கொள்ள பிரிவினை நன்கு அவதா னிக்க வேண்டியுள்ளது. இருப்பினும் விளங்கிக் கொள்ளாமை யின் மூலம் ஏற்பட்ட பிரிவு மனித வாழ்க்கையின் நிகழ்வுக ளுக்கு அச்சுறுத்தலாகவே இருக்கும். இது மனிதனை வெறுப்பு, எரிச்சல், விரக்தி போன்ற நிலைகளுக்கு இட்டுச் செல்லும் இத ஞல் உள்ளம் பாதிக்கப்படும். உள்ளம் பாதிக்கப்படும்போது மனிதச் செயற்பாடுகளின் வேகமும் பாதிக்கப்படும். இதனுல் மனித முன்னேற்றம் பாதிக்கப்படலாம். எனவே விளங்கிக் கொள்ளாமையின் மூலம் ஏற்பட்ட பிரிவு நிலையினை எந்தவகை யிலாவது அகற்றிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். இந்தப் பிரிவு நிலையினை அகற்றிக் கொள்ள வேண்டுமாயின் சம்பந்தப் பட்டவர்கள் விட்டுக் கொடுப்பதன் மூலம், ஏற்றுக் கொள்வ தன் மூலம், புரிந்து கொள்வதன் மூலம் நிவர்த்தி செய்து கொள்ளலாம். அப்போது மனம் நிறைவாக இருக்கும். அத்து டன் மகிழ்ச்சியாகவும் இருக்கும். இந்த வகை நிலைப்பாடே வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அவசியமாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களை ஒரு நாள் அனாதைகள் ஆக்குவோம்...

பலபூவின் மது அருந்தி
பசியாற வேண்டும் என்று
என்னைப் பரிமாற
இங்கு வந்தீர்கள்.
என் கண்களைத் தோண்டி
நீவிர்
என் கைகளில் தருவீரென
கனவிலும் கூட
கண்டுணர முடியவில்லை.
"பதினெட்டு வயதில்"
என்
பத்தினி பாத்திரத்தை
பறித்து எடுத்து
உடைத்திடுவீரென
நான் அறியேன்.
பதங்கெட வேண்டும் என்று
இம்மீன்
ஓடிய நீரை விட்டு
உங்கள் ஓடத்தில் பாய்ந்தது.
ஊசியின் காதில்
ஒட்டிய நூல் கொண்டு
கட்டிய ஊஞ்சலில்
கண்கட்டி ஏற்றி விட்டு
எங்கு சென்று ஒழிந்தீர்கள்.
அன்று நீங்கள் கிள்ளியபோது
துள்ளிய நான்
தள்ளி நின்று இருந்தால்
இன்று தப்பி இருப்பேன்.
ஒரு நிமிடம் நீர் என்னை ......
அந்த ஒரு நிமிடம்
மிகமிக சிறியது என்றாலும்
என் சிறகு ஒடிந்த
நேரமல்லவா?...
அன்புடன் ......
என்று நீங்கள்
எழுதிய கடிதம்
அம்பாக வந்து
என் இதயத்தின் சுவரை
இடித்துடைத்துச் சென்றது.
இனிமேலும் உங்களிடம்
யார்?... யார்?... ஏமாறுவாரோ
அன்பார்ந்த ஆண்களே
சொல்வதைக் கேளுங்கள்.
சீதனக் கயிற்றினால்
சிக்குண்ட நீங்கள்
தீக்குச்சி தலையிலும்
சிறியவர்கள் என்பதை
எம்மால் சிந்திக்க முடிகிறது.
திரௌபதி துகில் உரிய
துடிதுடித்த துரியோதனன்
போல்
இன்று நீங்கள்
துணையின்றி...
துணிவின்றி...
தனிமையில்...
வாடுகின்றீர்கள்.
அணுவை உடைத்தால்
ஆவது பெரிய சக்தி
அதற்கே இவ் உலகினை
அழிப்பதில்
முழு வெற்றி
இதுவே எங்கள் இதயசக்தி
எங்கள் இதயத்தையும்
உடைத்து
இந்த உடலையும் அழித்த
ஆண்களே...
உங்களை ஒரு நாள்
அனாதைகள் ஆக்குவோம்......

ஜெ. நிக்சன்
கரம்பனூர்,
காவற்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனங்கள் கலையும்போது.... 3

[ வளவை வளவன் ]

மூஞ்சூறு கவ்விய நாகம் போல அதிபர் ஆறுமுகம் துடித்துக் கொண்டிருந்தார். ஒருபுறம் நாளை நடக்கவிருக்கும் மகளின் பிறந்தநாள் கொண்டாட்டம், மறுபுறம் டேவிற்ருல் தொடுக்கப்பட்டுவிட்ட குற்றப்பத்திரிகையின் அனல் வீச்சு! இரண்டுக்கும் நடுவே அதிபர் ஆறுமுகம் வெந்து வேக்காளப்பட்டுத் தூண்டல் மீனுகித் துடித்துக் கொண்டிருந்தார்.

ஒவ்வொரு பெற்ருேரும் தனது பிள்ளைகளின் திறமைகளை அல்லது வீரதீரச் செயல்களைப் பிறர்வாயால் சொல்லித் தாம் கேட்கும் போதுதான் தமது பிள்ளைகளைப் பெற்றுவிட்டதற்கான உண்மை இன்பத்தை அடைகின்றனர், ஆனுல் அப்படியான எதிர்பார்ப்புகளுக்கு எதிரான ஒரு நிகழ்வை அல்லது சம்பவத்தை கேட்க நேர்ந்துவிட்டால்...... பெற்றமனங்கள் படுந்துயரத்தினை அளந்து விட இந்த உலகில் எவராலுமே, அல்லது எந்தக் கருவியாலுமே முடியாது.

தனக்குள்ளே கெம்பி எரிந்த ஒரு எரிமலையை அதிபர் எப்படித்தான் அடக்கிக் கொண்டாலும் அதன் பிரதிபலிப்புகள் வெளிவீசத்தான் செய்தது. முகமெல்லாம் வியர்வைத் துளிகள் மாலை வானத்தில் அங்கொன்று மிங்கொன்றுமாகத் தோன்றும் நட்சத்திரங்களாக அரும்பி அந்திவானை நிரப்பிய தாரகைக் கூட்டமாக மொய்த்து ஆயிரம் முகாரிபாடி அழுது வடிந்தன. தலைசுற்றுக் கனத்தது. என்ன செய்வதென்று தெரியாத தவிப்பில் சிக்கிச் சீரழிந்த அதிபர் ஒருமுறை தனது கைகளால் முகத்தைத் துடைத்துக்கொண்டார்.


பழிவாங்கல் பிரிவு வெறி, தாழ்வுமனப்பான்மை எதிர்பார்ப்பு ஆவல் அம்சங்களை கொண்டமைந்த தொடர்கதையே

“மௌனங்கள் கலையும்போது”

இதன் 3-ம் கட்டம் இதோ! மீதி உங்கள் கற்பனைகளில் பிறக்கட்டும்.


முகம் வியர்வையால் நனைந்து ஈரலிப்பாக இருந்த போதும் அவரது உள்ளம் என்னவோ அனலாய்க் கொதித்துக்கொண்டேயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் மகன் ஒரு பகற்கொள்ளைக்காரன்".

"எனது ஐநூறு ரூபா பணத்தை அவன் திருடிவிட்டானே"

"இன்றைக்கு ஐநூறு எடுத்தவன் நாளைக்கு ஆயிரமாகத் தொடருவான்",

ஒன்றன்பின் ஒன்றாக எழுந்த டேவிற்றின் அந்த வார்த்தைகள் அதிபரின் முன் உருப்பெற்றெழுவது போல மீண்டும் மீண்டும் எதிர் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

மூர்த்தியைத் தண்டித்துத் தனக்கு அவன் செய்துவிட்ட கொடுமைக்குப் பழிக்குப் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருந்த டேவிற்றின் செயல் மூர்த்தியைப் பழிவாங்குவதற்கு முன் ஒன்றுமே அறியாத ஒரு தூய உள்ளத்தைப் பழிவாங்கிவிட்டதை டேவிற் என்ன அறியவா போகிறான். இப்போது அவன் மூர்த்தியைத்தான் பழிவாங்கி விட்டதாக நினைத்து மனைவி மேரியோடு கொட்டமடித்துக் கொண்டிருப்பான் என்பதைத்தான் அதிபர் அறிவாரா என்ன?

எல்லாமிழந்த இராவணனின் நிலையில் இருக்கும் அதிபருக்கு டேவிற்றைப் பற்றியோ அவனின் மனோ நிலையைப் பற்றியோ எண்ணிக் கொள்ள இதயம் இடந்தருமா என்ன? பாவம் அதிபர் அன்றைய பொழுது தனக்குள்ளேயே ஒரு நிழல் யுத்தத்தை நடத்திக் கொண்டே படுக்கையில் வீழ்ந்தார்.

என்மகன் அப்படிச் செய்திருப்பானா?.. நான் கொடுத்த பணம் அப்படியே இங்கிருக்கும்போது அவன் இவ்வளவு சாமான்களோடும் மிச்சப் பணத்தோடும் வந்தானே... அப்படியவன் திருடியிருக்காது விட்டால் இந்தப் பணம் எப்படி அவனுக்குக் கிடைத்திருக்க முடியுமென்ற கேள்வி அதிபரின் மனதில் தொக்கி நின்றது. மூர்த்தியின் ஹப்பி பேர்த்டே ரூயூ இசையோடு காலைக் கமலமாகப் புவனா ஒளிவீசிக்கொண்டிருந்தாள். தோழியர் தோழர்கள் கூட ஒரே அமர்க்களம்தான். எல்லோரது வாழ்த்துக்களையும் ஏற்றுக்கொண்டு அவர்களோடு கைகுலுக்கிப் பரிமாறுவதில் புவனா பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தாள்.

ஹப்பி பேர்த் டே... விஸ்யூ ஒல்த பெஸ்ற், என்றவாறு வந்த பிரியாவைக் கட்டிப் பிடித்து அணைத்துக் கொண்ட புவனா "அண்ணா இவளைத் தெரியுமா? என்று கேட்கவும்— இவரா— எடியே... இந்த மூர்த்தி உன் அண்ணனாடி... என்று தான் மூர்த்திக்குப் புதியவளல்ல என்பதை நினைவூட்டி நிறுத்தினாள் பிரியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் பிரியா அண்ணு வரவில்லையா? என்ருன் மூர்த்தி.

அண்ணனு உனக்கும் ஒரு அண்ணன் இருக்கிருரென்று எனக்குச் சொல்லவேயில்லை என்ருள் புவனு.

அங்கே நின்றிருந்த அத்தனை பேரின் விழிகளும் மூர்த்தியையும் பிரியாவையுமே மாறி மாறி மொய்த்துக் கொண்டிருந்தன.

தனது பள்ளிக்கூடத்தில் தன்னிடம் படித்த பல மாணவிகளையும் ஒன்ருய்க் கண்டதில் அதிபருக்கு ஏதோ ஒரு இனம் புரியாத மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்தது. சென்ற ஆண்டு இறுதித் தேர்வுப் பரீட்சைக்கு வந்தபோது கண்டதற்கு அவர்களை அன்றுதான் ஒத்தபடி எல்லோரையும் காணமுடிந்தது. அதிபருக்கு அந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் இனிமேலும் காணக்கூடிய வாய்ப்பு எங்கு எப்போது வரப்போகுதோ என்ற எண்ணத்தோடு அதிபர் தனித்தும் ஒருமித்தும் அவர்களோடு பலவாறு பேசிக் கொள்ளத் தவறவில்லை.

எல்லாத் தோழியரும் ஒன்று கூடிவிட்ட மகிழ்வில் இடைப்பட்ட காலத்துச் சம்பவங்களையும் அநுபவங்களையும் எல்லோருமாகப் பகிர்ந்து கொண்டனர். பள்ளிக்கூட வாழ்க்கைதான் உண்மையிலேயே மாணவ வாழ்வின் வசந்த காலம் என்பதும், அதை இனிமேல் மீட்டிப் பார்க்கலாமேயன்றி அடையமுடியாதென்பதை ஒவ்வொருவரும் உணர்ந்தவாறு பேசிக்கொண்டிருந்தனர்.

பிரியா மட்டும் புவனுவைத் தனிமையில் அழைத்து ஏதேதோ பேசிக்கொண்டிருந்ததை அவளின் அபிநயம் நிறைந்த பேச்சுத் துலாம்பரப் படுத்திக் கொண்டேயிருந்தது.

நாளை மறுதினம் அண்ணு யேர்மனுக்குப் போகவேணுமாம் அது தான் இன்று மாலையே கொழும்பிற்குப் போவதற்கு எல்லா ஆயத்தங்களும் செய்கிருரடி. இன்று மதிய உணவு நானெப்படியும் அண்ணுவோடு தான் சாப்பிட வேணும். இனி எத்தனை வருடத்தின் பிறகுதானே இந்தச் சந்தர்ப்பம் வரும். நான் உன்னோடை அடுத்த பேர்த்டேக்கும் சாப்பிடலாம் அல்லது இடையிலும் வந்து சாப்பிட்டால் போச்சு என்று ஆலாய்ப் பறந்து நிறுத்திஞள் பிரியா.

நீ அண்ணனை அனுப்புற புழுகிலை என்னை விட்டிட்டுப் போகவாடி பார்க்கிருய். சரி சரி போ... ஆனுல் ஒன்று அண்ண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைச் சோடி சேர்க்காமல் இருக்கச் சொல்லிவையடி என்ருள் புவனு.

ஏன்டி நீ பிடிக்கப் பாக்கிறியாடி கள்ளி— எனக்குத் தெரியாமல் அப்படியொன்றும் செய்திடாதே. என்று பிரியாவும் கேலி செய்து ஒருவரை யொருவர் தள்ளிக் கொண்டு நின்ற போது தந்திக்காரனின் பெல் ஒலி பலமாகக் கேட்டது.

யாரோ தந்தியிலை வாழ்த்தனுப்பியிருக்கிருளாக்கும், என்று இழுத்தாள் பிரியா.

புவனு துள்ளுப் பாய்ச்சலில் தந்தியோடு திரும்பினுள் தங்கையின் கையில் தந்தியைக் கண்டதும் மூர்த்தியின் மனம் எங்கெல்லாமோ பறந்தது.

மூர்த்தியின் நினைவுகள் தந்தியைத் தொட்டுக் கொழும்பி லிருந்து விமானத்திலேறி வெளிநாடுகளை மேயத் தொடங்கியது. மூர்த்தி எதையோ பலமாக யோசிப்பதைப் பிரியா கண்கொட்டாமல் பார்த்து ரசித்தாள் அந்தப் பார்வையில் தான் எத்தனை நளினம்; எத்துணை வாவண்யம். பலரைத் திசை மாற்றிய பிரியாவின் பார்வையைத் திசை மாற்றுவது போல அண்ணு "ஹப்பி நியூஸ்.. ரியூஸ்டே பிளேட் கம் இமீடியற்லி," என்று தந்தி அடிச் சிருக்காங்கள் என்ருள் புவனு. முகமெல்லாம் பல்லாகப் புவனு எல்லாத் தோழியரையும் கட்டிக் கட்டி மகிழ்ந்தாள். அணைகடந்த வெள்ளம் போன்ற அந்த ஆனந்த மேலீட்டைக் கண்ட அதிபரோ திணறிப்போனுர்.

எத்தனைபேர் முற்பணமாக காசை வட்டிக் கெடுத்துக்கட்டி ஏமாந்து இன்று வரை காசைக்கூட திரும்ப வாங்கிக் கொள்ள முடியாமல் தவிக்கிருங்கள், இவனுக்கு அப்படியென்ன அதிஸ்டமோ. காசு, கட்ட முதலே தந்தி கொடுத்திட்டாங்கள், வந்த வெள்ளம் நிண்ட வெள்ளத்தைக் கொண்டுபோன கதைதானே அல்லது .. அதிபரின் மனம் அதீத போர்க்களமாக மாறியது

கொழும்புக்குப் போய் ஐநூறு ரூபாய்க்குப் பூசிய கரியைத் துடைக்க வழி தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும்போது இது வேறை ஆயிரக் கணக்கிலை என்ரை தலையைத்தான் கொண்டு போகுமோ? டேவிட் வந்து உடுப்பையும் சாயத்தையும் வாங்கினது யோதாதெண்டு என்ரை உயிருக்குத்தான் இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிதேடுதோ... யார் கண்டது. ஏதோ நடக்கிறது நடக்கட்டும், இப்ப எதையாவது கேட்டு அவனைக் கெடுக்கப்படாது. என்ற சிந்தனை ஊன்றப் பட்டவராகக் காணப்பட்டார்.

மூர்த்தி தந்தியை புவனாவிடம் வாங்கிக் கொண்டு அப்பாவை நாடினான்.

மகனை அப்படியே பார்த்துக் கொண்ட அதிபர் அவனுள்ளத்தைச் சல்லடை போட்டுத் துளைத்து எதையோ தேடினார் அவரின் தேடலில் ஐநூறு ரூபாதான் எங்குமே தட்டுப்பட்டுக் கொண்டு நின்றது. இவனைக் கண்டித்துத் திருத்தாமல் விட்டால்... டேவிற் சொன்னது போல் ஆயிரமாயிரமாக... ஆனால் தருணம் கண்டிக்கக் கூடியதாக இல்லையே... என்ன செய்வது என்று மனதைக்குழப்பிக் கொள்ள...

அப்பா... எப்படியும் இன்றைக்குப் புறப்பட்டால் தான் நாளைக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து.... இழுத்து நிறுத்தினான்.

ம்... சரிதான் நீ ஆயத்தப்படுத்து.... என்றுவிட்டு சோபாவைவிட்டு எழுந்து உள்ளே சென்று மறைந்தார்.

பிரியா புவனாவையும் மூர்த்தியையும் பிரிந்து சென்றாள். பிரியாவை வெளியே வீதிவரை கூட்டிச்சென்று வழியனுப்பி விட்டு வந்த மூர்த்தியைப் பார்த்துப் புவனாவின் தோழிகள் ஏதோ குசுகுசுக்கத் தவறவேயில்லை. அதிபரின் பெட்டிப்பாம்பாக இருந்த மூர்த்தி இப்படியெல்லாம் எப்படி மாறிப்போனானோ என்ற கேள்விகூடச் சிலரின் மனதில் இழையோட்டமாக எழத்தான் செய்தது.

இந்தச் சபலமான சந்தேகம் அதிபரைக்கூட விட்டுவைக்கவில்லை. எவ்வளவோ சிரமங்களைச் சுமந்து இவனை வெளிநாட்டுக்கு அனுப்பி நானும் ஒரு மனிசனாக நிமிரவேண்டுமென்று எத்தனையோ கோட்டை கட்டிக்கொண்டிருக்கும் என்னிடமிருந்து இவன். எங்கே இவனைப் பிரித்து விடுவாளோ என்று தன் மனதுள் அதிபரும் நச்சரித்துக் கொள்ளத் தவறவேயில்லை.

மனிதர்கள் தோற்றத்தில் என்னதான் ஒன்றாயிருந்தாலும் மனதால் ஒருமைப்படவில்லைத்தானே. அந்த ஒருமைமட்டும் மனிதனிடம் வந்துவிட்டால், இந்த உலகில் கவலைகளோ பிரச்சனைகளோ இருந்திருக்கவும் முடியாது. தோற்றுவாய் கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுல் இடமில்லையன்றோ. என்ன செய்வது மனிதரின் துயரங்களெல்லாம் மனதினால் வந்த ஒருவகை நோய்தான் போலும்.

அதிபர் ஆறுமுகம் நீண்ட சிந்தனையின்பின் ஏதோ ஒரு முடிவிற்கு வந்து விட்டார். என்னதான் அவனை இந்த நான்கு சுவர்களுக்குள் நான் வைத்திருந்தபோதும் ஏதோ ஒருவித மாற்றத்தை அவன் ஏற்படுத்திவிட்டானே என்ற ஒரு விழிப்பு புதியதொரு சிந்தனையாகப் பரிணமித்துப் பரிமாணமானது.

மூர்த்தியைப் பிரிந்து துயரப்படப்போகின்றேனே என்ற ஒரு பயம் மெல்ல மெல்ல அதிபரை ஆளுமைப்படுத்தியது. அந்தப் பிரிவின் வேதனையை நுகர்வதற்கு நானும் அவனோடு சென்று திரும்பினால் எங்கே அது அதிகரித்துவிடுமோ என்று அவர் அஞ்சினார்.

"எல்லோருமாகச் செல்வதும் தேவையற்ற செலவுதானே நீயே பஸ்ராண்ட் வரைக்கும் போய் அனுப்பிவிட்டு வா" என்னும் பாவனையில் மகள் புவனாவை மூர்த்தியோடு அனுப்பி வைத்தார் அதிபர்.

பிரிவுத்துயரை. எத்தனையோ இலக்கியங்களிற் படித்து அறிந்து வருந்திய காலங்களெல்லாம் இனி ஒன்றாகித் தன்னையும் அந்தப் பெருந்துயர்ப் பீடையில் வீழ்த்தி விடுமோ என்ற ஒரு விபரீதமான அச்சம் அவரின் உள்ளத்தின் அடிமூலையில் மெல்ல அரும்பிக்கொண்டிருந்தது. சட்டம் பிரிவினை ஆதரிக்கின்றது, சத்தியமும் பிரிவை அரங்கேற்றியது. தர்மமும்கூட பிரிவினை ஆதரித்திருக்கிறது. ஆனால் இவைகளுக்கெல்லாம் கட்டுப்பட மறுக்கும் மனங்களோ பிரிவை ஏற்பதில்லை. அது ஒரு வகைச் சுயநலம்தான். என்றாலும் சமயத்திலும் மனித மனங்கள் பிரிவால் தோல்வியடைத்தான் செய்கின்றன. இந்தத் தோல்விகளாலும் துயரங்களாலும்தான் இன்னும் பல காவியங்கள் உயிர்வாழ்கின்றன. அந்தக் காவிய வாழ்க்கையைக் காவியத்தில் தரிசிக்கும்போது அது சுவைக்கக்கூடியதாகவோ படிப்பினைத் தரக்கூடியதாகவோ இருப்பதுபோல மனிதனின் நிஜவாழ்க்கையில் அதனை அநுபவிக்கும்போது அப்படியிருப்பதில்லை, மாறாக பிரிவின் தாக்கம் வேறு ஏதாவதொரு மாற்றம் தோற்றம் பெற ஏதுவாகியிருக்கின்றது. மூர்த்தியின் இந்தப் பிரிவு கூட ஒருவகைத் தோற்றுவாயாக அமைந்து விடுமோ ......என்ற அச்சம் அதிபரை மெல்ல மெல்ல அரவணைத்து அவரை மௌனியாக்கிக்கொள்ள புவனாவும் மூர்த்தியும் சென்ற திசையையே பார்த்தவாறு அப்படியே வாயிலில் நின்றார் அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றங்கள் திருத்தப்படவேண்டும் அல்லது தண்டிக்கப்பட வேண்டும் என்று பாடசாலை வாழ்க்கையில் அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்த அதிபருக்கு இன்று தனது மகனது குற்றத்தைத் தண்டிக்கவோ திருத்தவோ சந்தர்ப்பமில்லாது போகப் போகிறதே என்றதொரு பயமும் எழத்தான் செய்தது. கீறல் விழுந்த இசைத்தட்டுப்போல அதிபரின் மனமும் அந்த ஐநூறு ரூபா வால் விழுந்த கீறலிலேயே நிலைகுத்தி நின்றது.

பிரச்சனைகட்கு முடிவு காணுமலேயே இவன் என்னைப் பிரிந்து போகப்போகிறுனே என்பதை எண்ணியபோது நெஞ்சில் ஏதோ ஒரு வலி எழுந்து அதிபரை வாட்டி எடுத்தது. துடித்துத் துடித்து அப்படியே அவர் அந்தச் சோர்வில் தன்னை மறந்து கிடந்தார்.

தோழியர் தோழர்கள் யாவரையும் அனுப்பி வைத்துவிட்டு புவனுவும் மூர்த்தியும் பிரயாணத்திற்கு வேண்டிய சகல ஆயத்தங்களோடும் தயாராகினர்.

மகளது கையில் சில ரூபா மதிப்புள்ள நோட்டுக்களைத் திணித்துவிட்டு அப்படியே சிலையாக நின்ருர் அதிபர். புவனுவின் கையில் கொடுத்தால்தான் மூர்த்திக்கு ராசியாக இருக்குமென்று ஒரு அபிப்பிராயம். இது அவர் புவனு பெரியவளான திலிருந்து கடைப்பிடித்துவரும் ஒரு வாடிக்கையான பாடம்.

இதுவரை மனதில் குமைந்து குமைந்து அதிபரை ஆண்டு கனத்துக்கிடந்த மௌனம் வெடித்துச்சிதறிக்கலைந்துகொள்ள அவர் பலமாகச் சிரித்தார்; ஆனுல் மனச்சாட்சியின் சிரிப்பா அல்லது மனப்பேதலிமையின் அவலக்குரலா? எதுவுமே புரிந்துகொள்ள முடியாத நிலையில் பெட்டிப்பாம்பாக இதுவரை வாழ்ந்த மூர்த்தி என்னை விட்டுப் பிரியப்போவதையுணர்ந்துதான் இப்படியொரு கறையைப்பூசி என்னைப் பெட்டிப்பாம்பாக மாற்றிவிட்டுச் செல்கின்ருனே என்று அவர் முணு முணுத்தார்.

எங்கோ எதையோ வெறித்துப்பாாக்கிருர் அதிபர்.

அவரது மனதில் பெரும் பூகம்பம் ஒன்று வெடிந்துச்சிதறுகிறது. மூர்த்தி செய்துவிட்ட தவறின் வலுவைவிட அவனது பிரிவுத்துயரின் வலு அவரை வெகுவாகத் தாக்கியிருக்கவேண்டும்.

கணநேரம் தான்......

அதிபர் ஆறுமுகம் தன் நெஞ்சைப் பொத்திப்பிடித்துப் பிசைந்தவாறு அப்படியே தசரதனை நினைவூட்டியவாறு நிலத்தில் சாய்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை பிரிகின்றேன்

## இ. ஸ்ரலின் — உரும்பிராய்

உன்னை நான் பிரிகின்றேன்
பிரிவை விரும்புகின்றேன்
உன்னை ஆழமாகப் புரிய முடிவதனாலே,
கற்பனைகள் கலைந்து போகின்றன,
உணர்ச்சி மயக்கங்கள் தெளிவடைகின்றன,
சிந்தனையிலே தெளிவு பிறக்கின்றது.
உன் அன்பை இப்போது வெளிச்சத்தில் பார்க்கின்றேன்,
உன்னை ஒரு புதிய கோணத்தில் நோக்குகின்றேன்.
நீ எனக்கு ஒரு அற்புத பிறவியாகக் காட்சியளிக்கின்றாய்.
உன்னில் காணும் இனிய சுபாவத்தைப் பாராட்ட விரும்புகின்றேன்.
சொல்ல நினைத்து மறந்தவற்றை சொல்ல நினைக்கின்றேன்
உன் குறைகளையும் சரியாக எடைபோட்டுக் கொள்ளுகின்றேன்.
பிரிவில் நான் காணும் நன்மைகள் இவை
ஆனால் உன்னோடு மீண்டும் இணைய ஆவல்.
அந்நியோன்னியமாகப் பேசி மகிழ வேட்கை.
அந்தரங்கத்தை பகிர்ந்து கொள்ள ஒரு ஏக்கம்.
உன்னோடு இலையும் நாளை எண்ணிக் கற்பனைகள்.
பிரிவில் நான் காணும் இனிமைகள் இவை.
பிரிவை எண்ணித் துவண்டு துன்பத்தில் வாழலாம்.
அன்றேல் அறிவுத் தெளிவு பெற்று,
நம் அன்பை சீர்தூக்கிப் பார்க்கலாம்
தவறுகளைத் தவிர்க்க வழி தேடலாம்.
உறவை இனிமையாக்க வழி காணலாம்.
பிரிவிலே எதைச் செய்வது என்று நீ தீர்மானிக்க வேண்டும்.
பிரிவிலே துன்பமுண்டு; ஆனால் நன்மைகள் பல.
உன் அந்நியோன்னியத்தை எவ்வளவு விரும்புகின்றேனோ
அதேயளவிற்கு உன்னை விட்டுப் பிரிவதையும் விரும்புகின்றேன்.
இணைவதும் பிரிவதும் அன்புக்கு இனிமையூட்டுபவை.
நம் அன்புக்கு இரண்டும் அவசியம் என உணருகின்றேன்.
நீண்ட நாள் சேர்ந்து வாழ்வதிலே சலிப்புண்டு.
தொடர்பின்றிப் பிரிந்து வாழ்வதில் தவறுகளுமுண்டு,
இணைவதும் பிரிவதும் சக்கரமாக.
இது நம் அன்பின் கதையாக வேண்டும்.
நிரந்தரமான பிரிவையல்ல,
தற்காலிகமான பிரிவையே விரும்புகின்றேன்.
எனவே உன்னை விட்டுப் பிரிகின்றேன்.
உன் உறவை முறித்துக் கொள்ள அல்ல,
மீண்டும் உன்னில் இனிமையாய் இணைந்திடவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் பிரிவைத் தாங்கும் தன்மை உடையவர்களா?

— ஞேசாய்ஞே B. Com —

"உறவு என்ருெரு சொல்லிருந்தால்
பிரிவு என்ருெரு பொருள் இருக்கும் ------

என்பது ஒரு கவிதையின் இரு வரிகள். ஆனல் பொருள் பொதிந்த வரிகள். அன்ருட வாழ்க்கையில் ஒவ்வொருவனும் பெறுகின்ற நிதர்சன அனுபவமும் கூட. மனித உள்ளம் உறவைத் தேடி அலைகின்றது. அந்த உறவினிலே சுகம், இன்பம் நிம்மதி காணத் துடிக்கின்றது. ஆனல் அந்த உறவின் பின்னல் ஒரு பிரிவு இருக்கின்றதே என்பதை நம்மில் பலர் சிந்திப்பதே கிடையாது. உறவுகள் நெருக்கமாகும் போது ஏற்படும் பிரிவுகள் தாங்க முடியாதவையாக மாறி மனிதனைப் பல தடவைகளில் வேதனையின், விரக்தியின் விளிம்பிற்கே தள்ளி, உளப் பிறழ்வு நிலையை ஏற்படுத்தி விடுகின்றன. உறவுகள் உள்ளவரை பிரிவுகள் தவிர்க்க முடியாதவைதான். ஆனல் எதையும் தாங்கும் இதயம் இருந்தால் பிரிவுகள், இழப்புக்கள் கூட அத்துணை வேதனை, விரக்தி, வெறுமையைத் தருவதாக அமையாது.

உங்களில் எத்தனை பேர் இத் தன்மையைக் கொண்டுள்ளீர்கள் என்பதைப் பரீட்சிப்போமா? தொடர்ந்து வாசிக்கும் போதே 'ஆம்; அல்லது 'இல்லை; என்று பதிலளியுங்கள்.

(1) சோகக் கதைகள், படங்கள், பாடல்கள் இலகுவில் என்னை உணர்ச்சி வசப்பட அல்லது அழ வைத்து விடுகின்றன. ( )

(2) எனது நண்பன் அல்லது நண்பியுடன் சிறிய மனத்தாங்கல் என்ருலே அதை என்னல் தாங்க முடியாதிருக்கின்றது. ( )

(3) நான் அதிகம் அன்பு வைத்த ஒருவன் அல்லது ஒருத்தி தற்காலிகமாக ஏதோ ஒரு காரணத்திற்காகப் பிரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்து வாழ்க்கையே சூனியமாகி விட்டதாக எனக்குத் தோன்றுகின்றது. ( )

(4) பிரிவுகள் ஏற்படும் போது நான் இலகுவில் உற்சாக மிழந்து, விரக்தி அல்லது வெறுமை நிலையை அடைவ தில்லை. ( )

(5) 'பிரிவு' எனது வாழ்க்கையில் தவிர்க்க முடியாததுதான் என்றெண்ணி அதை எந்த வழியிலும் சந்திப்பேன் என் னும் மன உறுதியுடன் வாழ்கின்றேன். ( )

(6) நான் அதிகம் அன்பு வைத்த ஒருவுன் அல்லது ஒருத்தி யின் எதிர்பாராத நிரந்தரப் பிரிவைத் தாங்க முடியா மல் தற்கொலை செய்ய முயற்சித்திருக்கிறேன், அல்லது அந்த எண்ணத்தைக் கொண்டிருக்கிறேன். ( )

(7) பிரிவே இல்லாத, என்றும் நிலைக்கின்ற உறவு இருக்கக் கூடாதா என ஏங்குவது எனது வழக்கமல்ல. ( )

(8) ஏனையோரை விட வாழ்க்கையில் எனக்குத்தான் பிரிவு அதிகம் என்று எண்ணி, பிரிவின் ஆற்றுமையால் வாழ்க் கையை நொந்து கொள்கிறேன். ( )

(9) 'பிரிவு' என்ற சொல்லே எனக்கு மன எரிச்சலைத் தருவ தாக உள்ளது. ( )

(10) பிரிவைப் பற்றி யாரும் கதைப்பது கூட எனக்குப் பிடிக் காத விடயமாக உள்ளது. ( )

4, 5, 7, ஆகிய வினாக்களுக்கு 'ஆம்' என்றும், ஏனைய வினாக் களுக்கு 'இல்லை' என்றும் பதிலளியுங்கள்; ஒவ்வொரு சரியான விடைக்கும் 10 புள்ளிகள் கொடுங்கள். 80 புள்ளிகளுக்கு மேலா யின் மிக நன்று; 70—80 ஆயின் நன்று 60—70 ஆயின் ஓரளவு திருப்தியானது அதற்குக் கீழ்ப்பட்டோர் உங்களை நீங்களே மீள் பரிசோதனை செய்து பிரிவைத் தாங்கும் தன்மையை உங்களில் வளர்த்து, எதையும் தாங்கும் இதயத்துடன் வாழ முயற்சி செய்யுங்கள்.

திருத்தம்:- சென்ற "நான்" இதழின் 22 ஆம் பக்கத்தில் 1,4, 8 ஆகிய கேள்விகளுக்கு 'ஆம்' எனப் பதிலளிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவில் உறவின் நினைவுகள்

— துளசி —

நினைவுகள் திறந்தது இதயத்திலே—அது
இணைந்ததை மறந்தது துயரத்திலே

நினைவதை மறைத்தது துயர்மேகம்—என்
விழிகளை நிறைத்தது நீர்க்கோலம்

அழுதிட மனமது ஆறவில்லை—அதை
எழுதிடத் தோன்றுது ஆகவில்லை

கவலைகள் மறைந்தது உறவினிலே—இன்று
ஒவ்வொரு கணங்களும் பிரிவினிலே

இதயத்தைக் கவர்ந்தவள் தொலைவினிலே—அவள்
இருந்தாள் நினைவால் அருகினிலே

மனமது மொழியெனில் இலக்கணம் அவளே
விடிவது பொழுதெனில் உறக்கமும் அவளே

கவலைகள் படர்கையில் ஆறுதல் அவளே
மகிழ்வுகள் தொடர்கையில் இனிப்பதும் அவளே

தவித்த என்விழிக்கு இமைகளாய் அவளே
தனித்த என்னுடலுக்கு நிழலாயும் அவளே

வரைவது கவிதை பொழிவுரை அவளே
மறைவது நினைவலை முடிவுரை அவளே,

---

## கவிதையரங்கம் 4

**தலைப்பு: வெறி** பரிசு; இயேசு காவியம்

**நிபந்தனைகள்:**

1. சொந்த ஆக்கமாகவும் உளவியல் நோக்குடையதாக வும் இருத்தல் வேண்டும்.
2. வெள்ளைத்தாளின் ஒருபக்கத்தில் மட்டும் எழுதப்படல் வேண்டும்.
3. போட்டிக்கு அனுப்பப்படும் பிரதிகள் திருப்பி அனுப் பப்பட மாட்டாது.
4. முடிவுத்திகதி 20-6-85.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்கள்

யன்னல் அருகில் உட்கார்ந்திருந்த ஜானகி, "அக்கா" என்ற குரல் கேட்டு அறையின் வாசலைத் திரும்பிப் பார்த்தாள். அங்கே இடையளவு கூந்தல் அழகாக வாரி இரண்டாகப் பின்னிவிட்டு வாய் நிறைந்த புன்னகையுடன் கண்களிலே ஒரு வித பாச உணர்ச்சி மேலோங்கி நிற்க அழகாகக் காட்சியளித்தாள் தீபா. ஆம் இன்று தீபாவினுடைய அண்ணன் ராஜன் இருந்திருந்தால் ஜானகியைத் தீபா கூப்பிடும் முறையே வேறுயிருந்திருக்கும் "அக்கா" என்பது மாறி 'அண்ணி' என அவள் வாய் நிறையக் கூப்பிடுவதை ஜானகி காது குளிரக் கேட்டிருக்க மாட்டாளா? அதற்குத்தான் ஜானகி கொடுத்து வைக்க வில்லையே. இப்படியாக எண்ணிய வாறு அவளது எண்ண அலைகள் ஐந்து ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றன.

அன்று வெள்ளிக்கிழமை அவள் தனது எதிர் வீட்டுக்காரி சுமதியுடன் மாதா சுரூபத்தின் முன் ஜெபித்துக் கொண்டிருக்கையில் தனக்குப் பின்புறமிருந்து ஒரு ஆணின் குரல் வருவதை உணர்ந்து திரும்பியவள் அங்கு ஒரு இளைஞனும் பத்து வயது மதிக்கத்தக்க சிறுமியும் செபம் செய்வதைக் கண்டவுடன் சட்டென தனது முகத்தை திருப்பிக் கொண்டாள். ஆனால் அந்தஇளைஞனின் முகத்

செல்வரட்ணம் யசிந்தா
சாவகச்சேரி.

தினை இன்னொருதரம் திரும்பிப் பார்க்க வேண்டும் போல இருந்தது அவளுக்கு ஆனாலும் அது நாகரீகம் இல்லை என்பதால் மனதை அடக்கிக் கொண்டாள் அந்த இளைஞனின் குரல் மாத்திரம் ஜெப வடிவிலே அவள் காதில் மிகத் தெளிவாகக்கேட்டது. மிகவும் இரக்கமாக இருந்தது அவன் செபம். அதனால் செவிப்புலனை கூர்மை ஆக்கிக் கொண்ட ஜானகியின் காதில் அந்த குரல் "மாதாவே உன்னையே நம்பி வாழும் என்னையும் என் தங்கையையும் கடந்த ஏழு ஆண்டுகளாக எமக்குத் தாய் தந்தை இல்லை என்ற குறை தெரியாமல் அரவணைத்து வளர்த்தாய். அதே போல் நாங்கள் தொடர்ந்தும் வாழ்வதற்காக நான் நாளை செல்லவிருக்கும் கம்பனியில் எனக்கு நிரந்தரவேலை கிடைத்து விடவேண்டும் தாயே" என மன்றுடுவது கேட்டது. அதன் பின் அவனும் அவன் தங்கையும் எழுந்து சென்று விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து ஜானகியும் சுமதியும் வெளியேறினர்.

ஜானகியின் மனதில் ஏனோ அந்த இளைஞனின் எண்ணமே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது அதனுல் அவள் வழியில் மௌனமாகவே நடந்து சென்ருள். இதை அவதானித்த சுமதி. "ஏண்டி ஜானு உன் முகம் ஒரு மாதிரி இருக்கு நானுந்தான் அப்போதே இருந்து கவனிக்கிறன். கோவிலில் நீ மன்ருடியது போலவே இல்லை. பின்னுல் இருந்த ராஜனையே விழுங்கி விடுவது போல பார்த்தபடி இருந்தாய்.என்னடி விசேடம்? என்ருள் கிண்டலாக இதைச் சற்றும் எதிர்பாராத ஜானகி திடுக்கிட்டவளாய் என்ன பெயர் சொன்னுய். ராஜனு? உனக்கு அந்த இளைஞனை ஏற்கனவே தெரியுமாடி" என்ருள் வியப்புடன். அதற்குச் சிரித்தவாறே சுமதி 'எனக்குத் தெரியாதா என்ன? அவரின் சரிதையே எனக்குத் தெரியும். ஆமாம் நீ ஏன் இதற்கு இப்படி விழிக்கிருய்?" என்ருள். உடனே ஜானகி தன்னை சுதாகரித்தவளாய் ,"ஒன்றுமில்லேடி சும்மாதான் கேட்டனுன். ஏது அவர் இந்த ஊரா"' என்ருள் ஜாடையாக அதற்கு சுமதி அவரு இந்த ஊரு இல்லை ஆனு அவங்க கொழும்பில வசதியாக இருந்தவங்க ஏழு ஆண்டுகளுக்கு முன்ன கொழும்பில நடந்த கலவரத்தில் இவங்க தகப்பன் இறந்துவிட்டார். இந்த அதிர்ச்சியைத் தாங்கமுடியாத அவங்க தாயும் போயிட்டாபிறகு அவரும் தங்கையுமாக அவங்கட சித்தியின் உதவியோடு இங்க வந்தாங்க இப்ப சித்தியிடமிருந்து விலகி, தனியா ஒரு வீட்டிலே அண்ணனும் தங்கையுமாக இருக்கிருங்க" என்ருள். வீட்டையடைந்த ஜானகிக்கு இன்னமும் ராஜனின் எண்ணமே நிறைந்திருந்தது.

மறுநாள் காலை அலுவலகத்தை அடைந்தவள் வேலையிலே லயித்திருந்தபோது 'குட் மோனிங் மேடம்' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தவள் ஒரு நிமிடம் மின்சாரம் பாய்ந்தாற் போல உணர்விழந்தாள்.இதற்கு காரணம் அவள் முன் நின்று கொண்டிருந்த இளைஞன் ராஜனே! இதைச்சற்றும் எதிர்பாராத ஜானகி சிறிது நேர மௌனத்திற்குப்பின் தன்னைச் சுதாகரித்தவளாய், "YES உங்களுக்கு என்னவேண்டும்" என்ருள் உத்தியோகதோரணையுடன் உடனே அவன் அவளிடம் ஒரு கடிதத்தை நீட்டினுன் அதில் மனேச்சரின் கையொப்பத்துடன் இவரை உங்களுக்கு உதவி ரைப்பிஸ்ராக நியமித்துள்ளேன் என்று எழுதப்பட்டிருந்தது. அதை வாசித்தவள் "கொன்கிருஜூ லேசன்ஸ்' என்று வாழ்த்தினுள்" தாங்ஸ் என்று கூறி, 'ராஜன்' என்று தன்னை அறிமுகப்படுத்தினுன். பின்பு அவனிடம் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை விடயங்களைப் பற்றிக் கேட்டறிந்து கொண்டான் அதே வேளை அவளுடைய பெயரை ஜானகி என்றும் தெரிந்துகொண்டான்?

நாட்கள் செல்லச் செல்ல அவர்கள் தங்களைபற்றிய பல கருத்துக்களையும் தங்களுக்குள்ள இலட்சியங்களையும் பரஸ்பரம் பரிமாறிக்கொண்டனர். இதுவே காலப்போக்கில் நட்பாகிப். பின் காதலாக மலர்ந்தது. அவர்களது சந்திப்பு அலுவலக அறை கான்டின் பஸ்நிலையம், தேவாலயம்என்று பரந்து சென்றபோது அவர்களது. காதல் விடையம் அலுவலகத்தில் இருந்த அனைவருக்கும் அம்பலமாகியது. இதனால் இவ்விடயம் ஜானகியின் வீட்டுக்காரருக்கும் தெரியவந்தது. இறுதியில் பெரியோர்களால் அவர்களுக்குத் திருமணம் செய்து வைப்பது என்று முடிவு கட்டப்பட்டது. இதையறிந்ததும் அவர்களிருவரின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அவர்களது சந்திப்பு பூங்கா சினிமா கொட்டகை கடற்கரை நண்பர்கள் வீடு—— என்று இன்னும் வியாபித்துக்கொண்டுசென்றதில் வியப்பில்லை. ஆனால் அவர்களது இந்த களங்கமில்லாத காதல் கண்டு பொறுக்க முடியாத காலதேவன் விதி உருவில் விளையாடுவான் என்று யார்தான் அறிவார்கள்.

ஒருநாள் வழமைபோல் அலுவலகத்திற்கு வந்த ஜானகி தனக்கு முன்னமே அலுவலகத்திற்கு வந்துவிடும் ராஜனைக். காணாது திகைப்படைந்தாள் அவனோடு வரும் கண்ணனையும் காணாதபடியால் இருவரும் இன்றைக்கு எங்கேயோ அரட்டை அடிக்கினம் போல என்று மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டு இருக்கையில் உட்கார்ந்தாள், ஆனால் நேரம் காலை ஒன்பது மணி ஆகியும் ராஜன் வரவில்லையே என்ற ஏக்கம் கண்ணிலே தெரிய வாசலை நிமிர்ந்து பார்த்த போது ராஜனோடு வரும் கண்ணன் பேயறைந்த முகத்துடன் வேர்வைவியர்த்தொழுகஓடோடி வருவதையும் நேராக அவன் மனேச்சரின் 'அறைக்குள் பிரவேசிப்பதையும் பார்த்தவள் தானும் தொடர்ந்து சென்று மனேச்சரின் அறை வாசலருகேயே நின்றுவிட்டாள். காரணம் உள்ளே கண்ணன் அழாக்குறையாகமனேச்சரிடம் கூறிக் கொண்டிருந்தான் "சேர் நம்ம கம்பனியிலே வேலை பார்க்கும் ராஜன் இன்று அவருடைய பால்ய நண்பன் பிரசாத்துடன் மோட்டார் சைக்கிளில் ஆபீசுக்குப்போவதாக கூறி என்னை பஸ் ஏற்றிவிட்டு வந்தான் ஆனால் இடையிலே அவர்களுடைய மோட்டர் சைக்கிள் ஒரு லொறியுடன் மோதி விட்டது. ராஜனின் நண்பன் பிரசாத் அவ்விடத்திலேயே மரணமாகி விட்டான்.ராஜனை பலத்தகாயங்களுடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றுள்ளனர். என்று மூச்சுவிடாமல் கூறி முடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பே வெளியில் நின்றிருந்த ஜானகி "ராஜன்" என்று அல றியவாறே மயங்கி விழுந்தாள்

மயக்கம் தெளிந்து ராஜன் இருந்த மருத்துவ மனைக்கு சென்றவள் அவனுடைய உட லிலே போட்டிருந்த கட்டுக் களையும் இரத்தம் குளுக்கோஸ் ஏற்றப்பட்டிருப்பதையும் கண்டு அவனருகிற் சென்று, சிறிது நேரம் அழுதுவிட்டு அருகில் நின்ற நர்சிடம், "இவருக்கு எப்படி" என்றாள் மெதுவாக. அதற்கு நர்ஸ் "உடம்பிலிருந்து அதிக அளவு இரத்தம் வெளி யேறி இருக்கு ஆகவே இப்போ ஒரு பைந் இரத்தம் ஏற்றிவிட் டாங்க அடுத்த பைந் ஏற்றிவிட் டிருக்கு இது ஏற்றியதும் அவர் கண்ணைத் திறக்கணும் அப்படி இல்லாட்டி அதற்கு மேலே இறைவனின் சித்தம் தான் நிறைவேறணும்" என்று கூறி வெளியேறினாள். ஜானகி இரத்தம் ஏறிக்கொண்டிருக்கும் குழாயையும் ராஜனது கண்ணை யும் மாறி மாறிப் பார்த்தபடி ஜெபித்துக்கொண்டிருந்தாள்' நர்ஸ் சொன்னதுபோல் ராஜன் கண் திறந்தான். அவனது வாயிலிருந்து தீபா ஜானகி? என்ற சொற்களே மாறி மாறி வந்துகொண்டிருந்தன, இதை அவதானித்தவள் உடனே தீபாவை அழைத்துவருமாறு போன் பண்ணிவிட்டு ராஜனரு கில் வந்து "ராஜன், ராஜன் நான்தான் ஜானு வந்திருக்கி றேன் என்னைத்தெரியுதா?' என் றாள் ஆவலுடன். அதன்பின் தண் ணீர்' என்று அவன் கேட்பதை அவதானித்தவள் நர்சின் உதவி யுடன் சிறிது வெந்நீரைச் கரண்டிமூலமாக அவனது வாயில் மெதுவாக விட்டுக் கொண்டிருந்தாள், கோப்பை யில் இருந்த தண்ணீர் முடி வதற்கும் 'அண்ணு' என்ற அல றலுடன் தீபா ஓடிவருவதற்கும் சரியாக இருந்தது வந்தவள் தமையனைக் கட்டிக்கொண்டு அழுதாள். அம்மா, தீபா எதற் காக இப்ப அழுகிறாய் உன்னை நான் அனாதையாக விட்டுவிட் டுப்போகமாட்டேனம்மா இதோ பார் இந்த ஜானகி அக்கா உன்னைக்கைவிடமாட்டா"என்ற வன் ஜானகியை நோக்கி "ஜானு நீயும் நானும், சேர்ந்து வாழ் வது இறைவனுக்குப் பிடிக்கலைப் போல அதோட நானும்உன்னை மனைவியாக அடைவதற்குள் கொடுத்துவைக்கவில்லை. நான் இன்னும் உன்னோட பேசிக் கொண்டிருப்பதே இந்த ஆஸ் பத்திரிக்கு வந்ததால்தான். இல் லாதுபோனு எப்பவோ என் னுயிர் பிரிந்திருக்கும் நான் உனக்கு என்னைத் தராவிட்டா லும் என் நினைவாக என் தங் கையையே உன்னிடம் ஒப் படைக்கின்றேன். நீ அவளைத் தங்கையாக பாவிச்சு அண்ணி என்றஸ்தானத்தை இன்னெருத் திக்கு கொடுத்துவிடம்மா இதற் கெல்லாம் சம்மதமா ஜானு?என் றான் ஈனமான குரலில் இவற்றை யெல்லாம் மௌனமாகக் கேட் டுக்கொண்டிருந்த ஜானு ராஜ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின் முகத்தை உற்றுப்பார்த் தபடி உறுதியாக பதில் சொன் ஞன் ''ராஜன் உங்களுக்கு என்ற உயிர் வேணுமானுலும் கேளுங்கோ ஆனுல் இன்ஞெருத்தருக்கு மனைவியாக இரு என்றுமட்டும் கேளாதைங்கோ அதோட உங்கதங்கச்சியை கண்கலங்காமல் காப்பாற்றிக் கொண்டு காலம் பூராவும் கன்னியாகவே வாழ்வேன்'' என்று உறுதிமொழி கூறினுள்' இதற்கிடையில் ராஜன் ஆழமாக சுவாசிப்பதை உணர்ந்தவள் அவனைக் குனிந்து நோக்கினுள் அவன் அவளது கையை முத்த மிட்டவாறே ஜானகி என்ற கடைசி வார்த்தையுடன் கண்களை மூடிக்கொண்டான். சொல்லும் 'ராஜன்' என்ற அண்ணு' என்ற சொல்லும் அலறல்வடிவமாக ஆஸ்பத்திரியையே ஆடவைத்தது.

அந்த கடைசி நேரத்தில் நிழலாடிய ராஜனின் நிர்மலமான முகத்தையும் தீபாவின் ஏக்கம் நிறைந்த முகத்தையும் அவள் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் மறக்கமுடியாது. ராஜன் இறந்து ஓரிருநாட்களுக்குள் அவனுடைய பிரிவு தாங்காது ஜானகிஎத்தனையோ தடவை தன்னையே அழிக்க எண்ணி இருக்கிருள் ஆனுல் ராஜன் அவளுக்கு அளித்த பொறுப்பு அவளை விடவில்லை.

இப்படியாக அவள் மௌனமாக எங்கோபார்த்துக்கொண்டிருப்பதை அவதானித்த தீபா மீண்டும் ஒருமுறை ''ஜானு அக்கா' என்று சற்றுப்பலமான குரலில் அழைத்தபோதுதான் ஜானகி தன்னுடைய எண்ணச் சிறகுகளை ஒடுக்கிக்கொண்டாள் உடனே தன் எதிரில் நின்றதீபாவைக்கட்டி அணைத்து முத்தமிட்டாள். இப்படியாக தான் தீபாவை இதுவரைகாலமும் கண்கலங்க விடாமல் காப்பாற்றியிருக்கிருள். ஆயினும் தினமும் அவள் கண்களில் இருந்து உதிரும் கண்ணீர் பூக்களையும் ராஜன் அவளுக் கேற்படுத்திய பிரிவுத்துயரையும் அந்த ஆண்டவனுல்கூட கட்டுப்படுத்தமுடியவில்லையே.

---

பத்திரிகைகள் பல பாராட்டுக் கூறும் ''ரிமா'' வின் கைவண்ணத்தால் இந்த இதழின் அட்டைப் படம் அழகுபடுத்தப்பட்டுள்ளது. சிந்தனை சிறப்புடன் உள்உணர்வை வெளிப்படுத்தும் அவரது திறமை மேலும் வளர்ச்சி பெறநன்றியோடு வாழ்த்துகின்ருேம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “இணைவது பிரிவதற்கல்ல”

- யாழ் பாலன் -

திருமண உறவால் இணைந்த பல உள்ளங்கள், சில கருத்து வேறுபாடுகளால் ‘பிரிவுமடல்’ தொடுப்பதைக் காண்கின்றோம். இதன் உண்மைநிலை என்ன என எண்ணிப்பாராது அதற்காகப் பக்கப் பாட்டுப்பாடி குடும்பங்களைப் பிரித்து வைக்கும் இதயங்களின் இரக்கமற்ற செயலினையும் எம் மத்தியில் காணமுடிகிறது. அன்று இறைவன், பெரியார்கள் முன்னிலையில் இன்பத்திலும், துன்பத்திலும் ஒருவரையொருவர் மதித்து, உதவி புரிந்து வாழ்வோமென வாக்குறுதி கொடுத்த இதயங்கள், தாங்கள் ஈருயிர் ஒருடலாகிய அந்தப் புனிதமான நிகழ்வினையும், கொடுத்த வாக்குறுதிகளையும், பெற்றுக் கொண்ட ஆசியுரைகளையும் மறந்தவர்களாக, அவற்றையெல்லாம் துச்சமாகக் கருதி ஒருவரை ஒருவர் தூற்றி பிரிந்து வாழ்கிறார்கள். தூய்மை அன்பில் கட்டி எழுப்பப்படாத திருமண உறவு அதில் இணைந்த மணமக்களின் நிலை இரு கள்வர் ஓர் குகைக்குள் திருடச் சென்றது போல தன்தன் சுயநல இச்சைகளை அனுபவிக்க இணைந்தார்களே அன்றி திருமண உறவால் இல்வாழ்க்கை அமைக்கும் எண்ணத்தில் இணையவில்லை என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

பிரிவுத்துயரைத் தாங்காது ஏங்கும் இதயங்கள் எத்தனை எத்தனை. அத்தனையும் உறவில் வளர்ந்ததனால் மீண்டும் உறவைத் தேடி அலைகிறது. இத்தகைய இதயங்கள் மீண்டும் உறவில் இணைய வேண்டுமாயின் இவர்கள் மனதில் தூய அன்பு மலரவேண்டும் பிறர் பேச்சுக்களால் சந்தேகப் புற்றுநோய் வளருவதும், நிலையில்லாத செல்வத்தால் கவரப்படுதலும், மாசற்ற அன்புப் பரிமாற்றம் இல்லாது கணவராகவும் மனைவியாகவும் நடித்து வாழமுனைதலும், நிறுத்தப்பட்டு, மக்கள் உளம் திறந்து, ஒருவரையொருவர் புரிந்து கொண்டு பிரிவுக்கு சாட்டை அடி கொடுத்து வாழ முற்படவேண்டும். உறவு வரும் பிரிவும் வரும் உலகம் ஒன்றுதான். எனவே இந்த உலகில் இதயங்கள் இணைவது பிரிவதற்கல்ல என்ற நற்சிந்தனையுடன் மக்கள் வாழ முற்பட்டால் உலகில் பிரிவின் துயரங்கள் குறைக்கப்பட்டு மக்கள் ஆனந்தமாக வாழ முடியும்.

---

## கருத்துக் குவியல் 38

### உடல் உள நோய்களுக்கு வெறியே காரணமாகும்

உங்கள் கருத்துக்களை சார்பாகவோ அல்லது எதிராகவோ எழுதி 20-06-85க்கு முன்னர் அனுப்புங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனப்பக்குவத்தின் மகத்துவம்

செல்வி தே. இராக்கினிதேவி - உடுவில்

உலகில் நாம் விரும்பியபடி எல்லாம் எம் வாழ்வில் அமைந்து விடுவதில்லை அப்படியே எல்லாம் அமைந்து விட்டாலும் மனிதன் மனிதனாக வாழும் நிலையில் இருந்து தவறி விடுகிறான் அதனாற்றான் போலும் எல்லாமே நிறையப் பெற்ற மனிதனைக் காண்பது வெகு அரிதாய் இருக்கிறது. அது இறைவன் கட்டளை என்கின்றனர். இயற்கை நியதி என்கின்றனர்.

எது என்னவாயிருந்தாலும் ஒரு குடும்ப வாழ்வில் தலைவியும் தலைவனும் இணையும்போது முதலில் அவர்களின் கல்வி, அறிவு, அழகு, அந்தஸ்து எல்லாவற்றையும் விட மனப்பொருத்தமே பெரிதாய் இருக்க வேண்டும். ஒரு தலைவன் விருப்பத்தை தலைவி ஏற்கவோ தலைவியின் விருப்பத்தை தலைவன் ஏற்கவோ முடியா விட்டால் அங்கே என்னதான் நிறைந்திருந்தும் அமைதி அழிந்து விடுகிறது.

ஒருவருக்கு ஒருவர் புரிந்து கொள்ளவும் ஒருவரை யொருவர் விட்டுக் கொடுத்து வாழவும் நிச்சயம் மனப்பொருத்தம் அவசியம். சில குடும்பங்களில் எத்தனை தொல்லைகள் ஏற்பட்ட போதிலும் அதைப் பொறுத்துத் தாங்கக்கூடிய சக்தி தலைவனுக்கோ தலைவிக்கோ இருந்து விட்டால் எதையும் சமாளித்து விடுவர்.

நாகரீக மோகம் கொண்ட ஒரு மனைவியை அடைந்த கணவர் அவளைப் புரிந்து கொண்டு ஓரளவென்றாலும் விட்டுக் கொடுக்கா விட்டால் அங்கே பெரும் பிளவு ஏற்பட்டு விடுகிறது. குடிப்பழக்கம் கொண்ட ஒரு கணவனை ஓரளவு ஏற்றுக் கொள்ளக் கூடிய மனப்பக்குவம் இருந்து விட்டால் எப்படியும் கணவனைத் திருத்தி குடும்பத்தையும் திறம்பட நடத்தி விடுவாள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியில்லாது ஏட்டிக்குப் போட்டியாக கணவனும் மனைவியும் நடந்து கொண்டால் அது குடும்பமாக இராது நரகமாக மாறிவிடும் அங்கே எந்நேரமும் சண்டையும் சமாதானமற்ற நிலையுமே ஏற்படும். இன்னும் குடும்பங்களில் இளம் பிள்ளைகளின் தொல்லை தாங்க முடியாது தாயும் தந்தையும் பிரிந்துவிடுகின்றனர். இந்தக் காலத்தின் போக்கையும் உணர்ந்து பிள்ளைகளை நடத்தக்கூடிய சக்தி பெற்றோருக்கு இருந்தால் பிள்ளைகளைச் சமாளித்து வாழ்க்கையில் வெற்றி பெறலாம்.

குடும்ப வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். இன்பம் வரும்போது அதை மிக மகிழ்ச்சியோடு அனுபவித்துவிட்டு துன்பம் வரும்போது நீ வேறு நான் வேறு என்று ஒருவருக்கொருவர் பிரிந்து செல்லப் பார்க்கின்றனர். எனவே இப்பொழுது அங்கே துன்பத்தை ஏற்கக்கூடிய மனநிலை அங்கில்லை. அதனால் பிளவு ஏற்படுகிறது. எனவேதான் பணம் பொருள் பண்டம் எல்லாவற்றையும் விட மனம் சரியாய் இருந்தால்தான் பிளவு இன்றி வாழ முடியும். எதையும் தாங்கக் கூடிய மனோசக்தி இல்லாமையே குடும்பப் பிரிவுக்கு முக்கிய காரணம் எனக் கூறலாம்.

# மனம்போல் வாழ்வு

குடும்பம் என்பது ஒரு கோவில் வாழ்க்கை அது ஒரு வசந்தம். குடும்பத்தின் வாழ்வை வசந்தமாக்குவது மனம். ஏனென்றால் "மனம்போல் வாழ்வு, மனம்போல் மாங்கல்யம்" என்று ஆன்றோர்கள்கூட கூறுவார்கள். ஏனெனில் வாழ்வில் பண்பட்ட உள்ளம் கொண்டோர்கள் இன்பத்தைக் கண்டு பிரமிப்பதில்லை. துன்பத்தைக் கண்டு துவளுவதுமில்லை. துயரத்தைக்கண்டு பதறுவதில்லை. தோல்வியைக் கண்டு விரக்தி அடைவதுமில்லை,

எத்தனையோ குடும்பங்களில் எண்ணற்ற பிரச்சினைகள் ஏராளமான சிக்கல்கள். அவை மனக்குழப்பங்கள், மனக்கசப்புகள், மனவேதனைகள் என்பதில் முடிகின்றன. சில சமயங்களில் உயிர்கள் அவலமாகவும் போகின்றது. அதனால் அரும்பிய மொட்டுக்கள், மலர்ந்த மலர்கள். வெதும்பிக் காய்ந்து போகின்றன. அதாவது குடும்பச் சிக்கல்கள் ஏற்பட்ட பெற்றோரால் குழந்தைகளின் வாழ்வு ஒரு இலட்சிய நோக்கற்ற உண்மையான மகிழ்வற்ற திசையற்ற ஒரு வாழ்க்கைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையை அமைத்துச்கொடுத்து அவர்களை விரக்தியின் விளிம்புக்குத் தள்ளுகிருர்கள். ஆகையால் மனதில் ஏற்பட்ட குழப்பங்கள் மணவாழ்வின் மகிழ்வை அழிப்பதுடன் அவர்களின் வருங்காலச் சந்ததியையும் பாழடிக்கிறது எனவே குடும்பங்களில் ஏற்படும் தனித்துவமான, சமுதாய, சமய பிரச்சினைகள் விரிவாகி குடும்பங்களில் கதையை சீரழிவை ஏற்படுத்துவதைக் காண்கின்ருேம், ஆகையால்தான் உலகக்கவிஞரில் ஒருவரான ஜோன் மிலான்,

"சொர்க்கத்தை நரகமாக காட்டுவதும் மனம்தான்
நரகத்தை சொர்க்கமாகக் காட்டுவதும் மனம் தான்"
என்று கூறுகின்ருர்.

எனவே வாழ்வில் ஏற்படும். சிக்கல்களை தீர்ப்பதற்கு மனத்தை ஒரு நிலைப்படுத்தி விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, பொறுமை, பெருந்தன்மை என்பவற்றைக் கைக்கொண்டு மனதைப் பண்படுத்தினுல் வாழ்வு மலரும். அங்கே பிரிவு என்பதற்கு இடமேயில்லை.

பிறமதீஸ்வரி கணபதிப்பிள்ளை,
அல்லைப்பிட்டி 1,

# தொடர்கின்ற உறவுகளும் தொந்தரவுகளும்

மனிதவாழ்க்கையில் உறவுகள் பல வடிவங்களாக உருவெடுக்கின்றது. ஆண்டவன் மனிதனைக் கருவறையில் உருவாக்கும் பொழுதே உறவு ஆரம்பமாகின்றது தாயின்மூலமாக மலரும் உறவு 'தந்தை. சகோதரர்கள், உறவினர்கள்' என்ற குறுகிய வட்டத்துக்குள் தொடங்கி "அயலவர்கள். நண்பர்கள், அறிமுகமானவர்கள்" என்று தொடர்கதையாகத் தொடர்கின்றது. உறவுகள் நம்மைத் தேடி வரும்போது நாம் இந்த உலகத்தையே மறக்கின்ருேம். சந்தோஷத்தில் மிதக்கின்ருேம். சில வேளைகளில் உணவையே மறக்கின்ருேம் அதே சமயம் பிரிவு வரும்பொழுது துடிக்கின்ருேம், மனம் குமுறுகின்ருேம். கண்ணீர் சொரிகிருேம்.

ஏன் ...? உறவு வந்தால் பிரிவு நிலை இருப்பதை நாம் உணராத படியால் ஒரு இளைஞனும் யுவதியும் ஒருவருக்கொருவர் அளவு கடந்த அன்பைச் சொரிகின்றனர்' ஒரு கணம்காணுவிட்டாலும் துடியாய்த் துடிக்கின்ருர்கள், மலைதான் இரண்டாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடித்தாலும் தங்களை யாராலும் பிரிக்கமுடியாத அளவுக்கு ஒருவரின் இதயத்தில் ஒருவர் இடம் பெற்று வருவார்கள். அவர்கள் உறவு வலுவடையும்போது விவேகத்தால் பிரிய நேரிடும் போது அல்லது சமுதாயத்தால் பிரிக்கப்படும்போது அதன் விளைவு உலகத்தில் காணும் பொருள் யாவற்றிலும் வெறுப்பு வாழ்க்கையில் விரக்தி. தாங்கமுடியாத வேதனை, இனி எனக்கு வாழ்வே இல்லையென்று நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். கனவுகள். கற்பனைகள், ஆசைகள், எதிர்பார்ப்புக்கள் பொய்க்கும் போது தற்கொலை செய்யும் நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்கள், இவற்றுக்கெல்லாம் காரணம் மனமேயாகும்.

யேக்கப் சாந்தி,
நெடுந்தீவு - 5-

# பசுமை உள்ளத்தில் படரும் ஆசை

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் குடும்பம் ஒரு கதம்பம் இன்று கேட்பதற்கு இனிமையான வசனங்கள் ஆனால் இவை இன்றைய உலகின் ' வெறும் சினிமா வசனங்கள்தானா?

சண்டை சச்சரவுகள் இன்றி சமாதானப்பாதையில் செல்லும் குடும்பங்களை காண்பது அரிதிலும் அரிது, இவற்றுக்கெல்லாம் காரணம் மனிதன்தான் அவனை ஆட்டிப்படைப்பது அவனது மனமே. அது ஆட்டுகின்ற திசைகட்கெல்லாம் அவனும் ஆடுகிறான் விளைவு குடும்பமே ஆட்டம் காண்கிறது, இம்மனத்தைக் கட்டிப்போட்டு அடக்க மனிதனால் முடியாதா? நிச்சயம் முடியும். மனித மனம் நன்கு அமைந்தால் அவன் வாழ்வு நன்கமையும்.

அன்றுடம் நம்மனதில் அலையோடும் அழகிய எண்ணங்களுக்கு அணைபோட்டு காப்பதன்மூலம் ஆங்காங்கே சிந்தியிருக்கும் நல்ல எண்ணங்களைக் காப்பாற்றமுடியும் மனதை ஒருநிலைப்படுத்திவிட்டால் மலைபோன்ற குடும்ப வாழ்விற்கு விலைபோட முடியாது: மனம் கட்டுப்படாத வாழ்வில் நடக்கும் எல்லைமீறிய செயல்களால் ஏற்படும் விபரீதங்களே குடும்பப் பிரிவிற்கு சாதகமாய் அமைகிறது.

பசுமையான உள்ளத்தில் படரும் ஆசை என்னும் பாசிக் கொடிகள் மனதில் சிக்கல்களை ஏற்படுத்துகிறது. அன்பு பொறுமை, அடக்கம், பணிவு, இப்படியான தெய்வீக எண்ணங்களே எம் மனதுள் அடங்கவேண்டிய பொக்கிஷங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித மனதில் தான் வாழ்வு தங்கியுள்ளது. தான் வாழாது மற்றோரும் வாழவேண்டும். எனக்குக் கிடைப்பது மற்றவனுக்கும் கிடைக்கவேண்டும் என நினைப்பவன் மற்றவர்களால் அன்பு செய்யப்பட்டு வாழ்வான் போட்டி, பொறாமை, வஞ்சகமின்றி வாழும் குடும்பத்தில் உறவு நிலைக்கின்றது. ஆகவே மனம் தான் குடும்பபிரிவுக்கு காரணமாகிறது.

நான் நேயர்,

இலுப்பைக்குளம்

# மனம் மட்டும் காரணமல்ல

இறைவன் படைப்பில் மிகவும் விசித்திரமானதும், சிறப்பு வாய்ந்துமான படைப்பு மனிதன்தான் என்பதனை யாரும் மறுப்பதற்கில்லை. இப்படிப் படைக்கப்பட்ட மனிதன் உடல், உள்ளம் என்ற இரு நிலைக்குள் வாழ்கிறான். சில வேளைகளில் மன உணர்வுகளுக்கும் உடல் செயற்பாட்டிற்கும் வேறுபாடுடையவனாக மனிதன் காணப்படுகின்றான் எம் நாளாந்த வாழ்விலும் இவ் வேறுபாட்டினைக் காணுகின்றோம். நாம் நினைப்பது ஒன்று செய்வது ஒன்று இதில் இருந்து நாம் புரிந்து கொள்வது என்ன? மனம் நினைத்ததை செயலாற்ற எமது உடல் மட்டுமன்றி வேறு காரணிகளும் பெரும் பங்கை வகிக்கின்றது என்பது மேற்கூறிய உடல் உள அமைப்பைக் கொண்டுதான் "குடும்ப பிரிவில் மனம்தான் காரணம்" என்ற கருத்து மோதலுக்குள் நுழைகின்றேன்,

எந்தக் குடும்பத் தலைவனும் தலைவியும் தம் குடும்பம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும், தம்முன் தோன்றும் பிரச்சனைகள் வீதி சென்று ஊர் வாயில் அகப்பட்டு அல்லல் படக் கூடாது என்ற மனம் கொண்டவர்களாகவே இருப்பார்கள் என்பதனை யாரும் மறுக்க மாட்டார்கள். இருந்தும் குடும்பப் பிரிவுகள் தோன்றுகின்றன. காரணம் என்ன? திருமணம் புரியும் இருவரும் தனித்தனி இயல்புகளைக் கொண்டவராக இருக்கின்றனர். இந்த நிலையில் இணைகின்ற இருவரும் தம் இயல்புகளுக்கேற்ப ஒரு சமநிலை காண முற்படுகின்றனர். ஒருவர் இயல்பை ஒருவர் புரிந்து விட்டுக் கொடுத்து வாழ முற்படுகின்றனர். முற்கோபம் கொண்ட கணவனிடம் தான் பொறுமையாக நடக்க வேண்டுமென மனைவி எண்ணுகிறாள். என் முற்கோபம் குடும்பத்திற்கு கூடாது அதனைத் தவிர்க்க வேண்டுமென கணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுகிருன். இருவர் மனமும் குடும்ப ஒற்றுமையையே எண்ணியிருக்கிறது. ஆயினும் சந்தர்ப்பம், சூழ்நிலை போன்ற வற்ருல் தாம் தீர்மானித்ததை மறந்து கணவன் கோவிப்பதும் மனைவி பொறுமையிழந்து சண்டை பிடிப்பதும் நடக்கத்தான் செய்கிறது. மனம் ஒன்று எண்ணுகிறது ஆனல் செயற்படுத்த முடியாத நிலை உருவாகிறது. எனவே குடும்பப் பிரிவுகளுக்கு மனம்தான் காரணம் என்ற தனிக்கூற்றை ஏற்றுக் கொள்ள முடியாது. மனத்தோடு உடல் சூழ்நிலை, சூழல் ஆகியன குடும்பப் பிரிவுகளுக்கு பங்கெடுத்து நிற்கிறது என்பதனை நான் கூருமலே புரிந்து கொள்ளலாம்.

கி. கிறிஸ்தோப்பர்
எட்டியாந்தோட்டை.

# நண்பா! நீ எங்கே?

ஒ ...... என்னுயிர்த் தோழா
எனை நீ பிரிந்து எங்கே
வாழ்கிருய் ..........
தம்பியாய், நண்பனுய்
நீ யெங்கள் மைத்துனனுய்
அதுவும் போதாதென்று
ஆருயிர்த் தோழனுய்
இணை பிரியாது வாழ்ந்தாயே
இப்போ......
எனைப் பிரிந்து எங்கே
வாழ்கிருய்..........
ஒன்ருய் வாழ்ந்தும்
ஓர் குவளையில்
நீர் குடித்தும்
ஓர் போர்வையில்
உறங்கி யெழுந்தும்
என்னவாய் வாழ்ந்தோம்
நண்பா!
இப்போ......
பொல்லா விதி வந்து
ஆளுக்கொரு திக்கானேமே...
அடே நண்பா!
நான் ஓர் முட்டாள்
நட்பு போது மென்று
முற்றுப் புள்ளி வைத்துவிட்டு
ஓட்டை மீட்க வென்று
நாண்டு கொண்டே
போய்விட்ட
உன் பிரிவை
தாங்க முடியவில்லையே
யென்று
முதலைக் கண்ணீர்
வடிக்கின்றேன்.
நீயோ......
இலட்சிய வீரன்
அடக்கப்பட்ட எம்மினத்தின்
அடிமை விலங் கொடிக்க
ஆயுதம் ஏந்தி
செருக்களம் சென்று விட்டாய்
நானே ..........
மனச் சாட்சியை
மறக்க முடியாமல்
என்னுயிரை அடகு வைத்து
சில உள்ளங்கட்காய்
(மன்னிக்க, வயதேறியதாய்,
ஊனமுற்றதங்கை)
உன்னிடம் வரமுடியாமல்
உனைப் பிரிந்து வாழ்கிறேன்

மா. டக்ளஸ்(ராஜா)
புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவுகள் என்றும் கொடிய தீ

இளமை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரே ஒரு தரம் ஆண்டவனால் பரிசளிக்கப்படும் ஒரு காலம். மாமரத்தில் மாங்காய் காய்க்கும் போது மனித மனத்தில் துடிப்பிருக்கும் காலமே இளமைக் காலமாகும். இளமையின் சிந்தனைகள் சுகமானவை, இதமானவை. அவை வானக் கூரையை பிளந்து கொண்டு மேலே தாவுகின்றன. காட்டாற்று வெள்ளத்தில் குதித்து எதிர் நீச்சல் போடுகின்றன. கங்கை நதியின் குறுக்கே பாய்ந்து தன் கை கால்களாலேயே அதை தடுத்து நிறுத்த முயல்கின்றன. இரத்தத்தின் ஜீவ அணுக்கள் சித்தத்தை துடிக்க வைக்கின்றன. இன்பம், துன்பம் இரண்டிலும் மிகைப்பட்ட நிலையை இளமைக் காலம் கண்ணுக்குக் காட்டுகிறது. அது மேன சத்தத்தோடு சேர்ந்து கொள்கிறது, வீணையின் ஒலியில் நர்த்தனமாடுகிறது.

இந்த இன்பமான இளமைக்காலத்தில் தான் அன்பு பெருக்கெடுத்து ஓடுகிறது. மனிதன் சாதி, மத, பேதமின்றி மற்றவர்கள் மேல் அன்பு செலுத்துகிறான். ஒரு பெண் ஆணின் மீது தூய்மையான அன்பு செலுத்தி நாளடைவில் அது காதலாக மாறுகின்றது. காதல் என்ற வலைக்குள் வீழ்ந்து எழாதவர்கள் மிகவும் மிகவும் அரிதே. ஒரு பெண்ணிடம் புனிதமான காதல் பிறந்து விட்டால் அவனைப் பார்க்க வேண்டும், பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும், பேச வேண்டும், பேசிக் கொண்டே இருக்க வேண்டும். என்ற ஆசை வளரும். அவனைக் காணாத நேரமெல்லாம் கனவு காணும், கற்பனை செய்யும். இது அவன் மீது கொண்ட தூய அன்பிற்கு எடுத்துக் காட்டாகும்.

இந்த தூய்மையான இனிமையான இளமைக் காலத்தின் பிரிவு என்ற சொல் பிறந்து விட்டால் அதை விடக் கொடியது ஒன்றும் இல்லை. இதனால் தன் வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொள்பவர்கள் எத்தனை பேர். எல்லாம் வல்ல கடவுள் காதலர்களை பிரிவு எனும் துயர் வாட்டாது பார்த்துக்கொள்ள வேண்டும். பிரிவு என்னும் துயர் காதலர்களை வாட்டும் என்றால் காதல் என்ற சொல்லையே அழித்து விடுவோம். "பிரிவுத் துயரை விட கொடிய துயர் உண்டோ"

கீத்தா மு.
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவும் அதற்கான காரணங்களும்

ஆ. செளந்தரலிங்கம் B. A. (Hons)

மனிதன் தோன்றிய காலம் தொட்டு மற்றவர்களுடன் சேர்ந்து வாழ வேண்டுமென்ற மனப்பான்மையைக் கொண்டவனாகக் காணப்படுகிறான். விஞ்ஞானம் வளர்ச்சியடையாத அக்காலத்திலிருந்து விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த இக்காலத்திலும் கூட மனிதன் சேர்ந்துவாழ வேண்டுமென்பதில் அக்கறை காட்டுகிறான். ஆரம்ப காலங்களில் இயற்கையை வென்று வாழ்வதற்கும், பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், ஒரு மனித சமூகம் மற்றைய சமூகத்திடமிருந்து தன்னையும் தன் உடமைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்கும், சேர்ந்துவாழ வேண்டிய அவசியம் ஏற்பட்டது. காலப்போக்கில் நாகரீகம் வளர்ச்சியடைய மனிதர்களிடையே உறவு முறைகள் வலுப்பெறத் தொடங்கின. கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், மாமன் மருமக்கள், சகோதரன் சகோதரிகள், பேரன் பேத்தி முதலான உறவு முறைகள் உருவாகி மனிதர்களிடையே ஆத்மார்த்தரீதியான பிணைப்புக்கள் ஏற்படத் தொடங்கின. இதனால் சேர்ந்து வாழும் பண்பு வளர்ச்சியடைந்தது.

மேலும் மேற்கூறிய உறவு முறைகள் தம்மிடையே காணப்படாத நிலையில் கூட மனிதர்கள் இன்று இனம், மொழி, மதம், கட்சி, சமூகம் என்ற அடிப்படைகளில் தமக்கிடையே ஒருவித உறவினை ஏற்படுத்தி வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். இவ்விதமான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு வாழும் போதுதான் மனித வாழ்வு இனிமையாகவும் இலகுவாகவும் சுமுகமாகவும் காணப்படுகிறது. ஆனால் தவிர்க்க முடியாதபடி மனித வாழ்க்கையில் பிரிவு என்ற அம்சம் இடம்பெற்று விடுகிறது. உறவு என்ற அம்சம் மனித வாழ்க்கையில் இருக்கும்வரை பிரிவு என்ற ஒரு விடயமும் இருக்கவே செய்கின்றது. அவ்வாறு ஏற்படும் பிரிவுகளுக்கான காரணிகளைப் பற்றி ஆராய்வதே இக் கட்டுரையாகும்.

பிரிவு என்பதை இரண்டாக வகுக்கலாம் ஒன்று பௌதீக ரீதியான பிரிவு; மற்றையது உளரீதியான பிரிவு.

## பௌதீக ரீதியான பிரிவு

உளரீதியாக அன்றி உடல் ரீதியாகத் தம்முடைய உறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளிலிருந்து பிரிந்து வாழ்வதை இவ்வாறு குறிப்பிட லாம். சம்பந்தப்பட்ட உள்ளங்கள் விரும்பியிருக்க மாட்டா. ஆனால் சூழ்நிலைகளினால் இவ்வாறு உடல் ரீதியாகப் பிரிய வேண்டி நேர்ந்திருக்கும். பொதுவாகக் கூறுமிடத்து இறப்பு எனும் பிரிவு பல்வேறு நிலைப்பட்ட உறவினர்களிடையேயும் காணப்படும் ஒரு பொதுவான பிரிவாகும். கூடவே அது துன்பத்தையும் கொண்டு வரும். இறப்பினைத் தவிர வேறு வகையான பௌதீக ரீதியான பிரிவுகளும் காணப்படுகின்றன. கல்வி, தொழில் சம்பந்தமாக வேற்றூருக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ பிரிந்துசெல்ல நேரிடும்போது அங்கும் இத்தகைய பிரிவு ஏற்படுகின்றது.

## உளரீதியான பிரிவு

தாமாகவே விரும்பி உள்ளத்தால் மற்றவர்களிடமிருந்து பிரிந்து வாழுதலை உளரீதியான பிரிவு என்று கூறலாம். அதாவது சமூகத்தில் ஏனையவர்களுடன் தொடர்புகளை அறுத்துக் கொண்டு தாமாக தமக்கு ஒரு எல்லையை ஏற்படுத்திக் கொண்டு பிரிந்து வாழுதலை இது குறிக்கும். இதற்குப் பின்வருவன காரணிகளாக அமைகின்றன,

## கொள்கை முரண்பாடு

திருமணத்தில் இணைந்து விட்ட ஆண் பெண் இருவரிடையேயும் இத்தகைய உளரீதியான பிரிவு ஏற்பட முடியும். கொள்கை முரண்பாடுகள் இவற்றுக்கு காரணமாக அமையலாம். உடலாலும் உள்ளத்தாலும் ஒத்துப்போகாமை பரஸ்பர விளக்கமின்மை, மூன்றுவது நபர்களின் தலையீடுகள் போன்ற காரணிகளினால் கணவன் மனைவியர்க்கிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு உளரீதியான பிரிவு ஏற்படுகிறது.

பெற்றோரின் தீவிரமான கட்டுப்பாடுகள், அடக்கு முறைகள் பிள்ளைகளின் ஆசாபாசங்களைப் பற்றி அசட்டையுடன் இருத்தல், போன்ற காரணங்களினாலும் பெற்றோரின் மூட நம்பிக்கைகள் போன்றவற்றினாலும் பெற்றோர்க்கும் பிள்ளைகளுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றன. இதன் காரணமாக அவர்களுக்கிடையே உளரீதியான பிரிவு ஏற்படக் கூடியதாகவுள்ளது.

## ஜாதி மத முரண்பாடுகள்

ஜாதி, மதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட சில மக்களுடன் தொடர்புகளை வைத்திருக்கக் கூடாது என்ற எண்ணத்துடன் பிரிந்து வாழும் பலரை நடைமுறையில் காண்கிறோம். நகரங்களிலும் பார்க்கக் கிராமங்களில் இவை அதிகமாக உள்ளன. இன்றும் சில இடங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் வெளிப்படையாகவும், கூடியளவுக்கு மறைமுகமாகவும் சாதி, மதப் பிரிவினைகள் காணப்படுகின்றன. தம்மை உயர் சாதியினர் என்று எண்ணிக் கொள்ளும் சிலர் ஏனையோருடன் சேர்ந்து வாழ்வதை விரும்பாமலும், சில மதங்களைச் சார்ந்த மக்கள் திருமணம் போன்ற விடயங்களில் தத்தமது மதத்துக்குள்ளேயே தொடர்புகளை வைத்திருக்க விரும்புகின்றனர். குறிப்பிட்ட சில சமயங்களைச் சார்ந்தவர்களின் சம்பிரதாயங்கள் சடங்குகள் போன்றன இத்தகையபிரிவினைகளை ஏற்படுத்துகின்றன. இவ்வாறு உளரீதியில் பிரிந்து வாழ்வதற்கு சில காரணங்களைக் கூறுகின்ருர்கள். ஆண்டாண்டு காலமாக பேணிவரும் மரபினை மீறிவிட விரும்பாமை மூடப்பழக்க வழக்கங்களினல் தம்மைக் கண்டனத்துக்கு உள்ளாக்கிக் கொள்ள விரும்பாமை, போன்ற காரணங்களினுல் இவ்வாறு பிரிந்துதான் வாழவேண்டும் என்று அவர்கள் கருதுகிருர்கள். எதிர்கால சந்ததியினரிடையே பிரச்சினைகள் ஏற்படுவதைத் தடுப்பதற்காகவேனும் ஜாதி. மத விடயங்களில் பிரிந்துதான் வாழ வேண்டும் என ஒரு சாரார் விரும்புகின்ருர்கள்.

## பணம் செல்வம்

பணவசதியும் பொருள் வசதியும் கொண்ட சிலர் தம்மை விட வசதி குறைந்தவர்களுடன் தொடர்பு கொள்வதை நிறுத்தி தம்மை வேறுபடுத்திக் காட்டி நிற்பதுவும் ஒரு வகைப் பிரிவாகும். பண வசதியைப் பயன்படுத்திப் பல்வேறு விதமான ஆடம்பர நடவடிக்கைகளிலீடுபடுவதன் மூலம் தம்மை மற்றவரிடமிருந்து பிரித்துக் காட்டுகிருர்கள் இவர்கள். தமது செல்வ நிலைக்குக் குறைந்தவர்களுடன் கலந்து கொள்வதை இப்பேர்ப்பட்டவர்கள் விரும்புவதில்லை. இவர்களில் பலர் தம்மை மற்றவர்களிடமிருந்து பிரித்துக் காட்ட வேண்டுமென்ற நோக்கில் மற்றவர்களுக்கு சிறு உதவிகள் கூடச் செய்ய முன் வருவதில்லை. பணக்காரர்கள் எல்லோரும் இப்படிப்பட்ட கொள்கையைக் கொண்டவர்களல்ல. பல ஏழைகள் காணப்படுகின்ற ஒரு சமுதாயத்தில் காணப்படும் ஒரு சில பணக்காரர் மட்டுமே இவ்வாறு வாழுவர். இவ்வாறு பிரிந்து வாழ்வதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் பல. பொருட்களை இரவல் கேட்டுத் தொல்லை செய்வது, கடன் கேட்டுத் தொந்தரவு செய்வது, தமது வசிப்பிடங்களை அழகான முறையில் வைத்திருப்பதில் ஏற்படும் பிரச்சினைகள், போன்ற விடயங்களை அவர்கள் தமக்குச் சார்பாக வைத்துக் கொண்டு பிரிந்து வாழும் வாழ்க்கையை மேற்கொள்கின்ருர்கள்.

## கல்வி உத்தியோகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியறிவு அதன் மூலம் பெற்றுக் கொண்ட உத்தியோகம், இவற்றை அடிப்படையாகக் கொண்டு தம்மைத் தாமே மற்றவர்களிடமிருந்து பிரிந்து வாழும் ஒரு சிலரும் சமூகத்தில் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள். குறிப்பாக கல்வியறிவில் வளர்ந்து வரும் சமூகங்களில் தான் இதனை அவதானிக்க முடியும். கல்வி கல்லாதவர்களை இத்தகைய பிரிந்து வாழ்வோர் ஒரு பொருட்டாக மதிக்க மாட்டார்கள். மற்றவர்களிடமிருந்து தம்மை வேறுபடுத்திக் காட்டும் வகையில் தமது பேச்சு, நடை, உடை, பாவனைகளை மாற்றிக் கொள்ளுவர். தமது வாழ்க்கையில் சில செயற்கை அம்சங்களை வலிந்து புகுத்திக் கொள்வர். படிக்காத மேதைகளும் உண்டு என்பதை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அதிகம் படித்தவர்களிடம் பெரும்பாலும் இவ்வாறு பிரித்து நோக்கும் பண்பு காணப்படுவதில்லை, நுனிப்புல் மேய்ந்தோரிடமும், சில அரைகுறைப் படிப்பாளிகளிடமும் தான் இப்பண்பு மிகுதியாகக் காணப்படுகிறது. பெயரளவுக்கு அதிகம் படித்தும் சிலருக்கு மனப்பக்குவம் ஏற்படுவதில்லை. அத்தகையோரிடமும் இவ்வாறு பிரிந்து வாழும் பண்பு காணப்படுகிறது,

பெரும்பாலானோர் படிக்கிராத ஒரு சமுதாயத்தில் படித்த சிலர் இவ்வாறு பிரிந்து வாழ்வதற்கு சில காரணங்களும் இருக்கத்தான் செய்கிறது. படித்தவர்கள் விரும்பும் ஒரு அமைதியான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கப் படித்திராதவர் உதவமாட்டார்கள். உதாரணமாக, உரத்த சத்தத்தில் கதைத்தல், அடிக்கடி அயலவருடன் சண்டை பிடித்தல், வானொலி, ஒலிபெருக்கி, தொலைக்காட்சி போன்றவற்றை உயர்ந்த சத்தத்தில் பாவிப்பது, போன்றவை இத்தகைய தொந்தரவுகளிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளத் தமக்குத் தாமே ஒரு எல்லையை ஏற்படுத்தி பிரிந்து வாழ்வதாகக் கற்றவர்கள் வாதிடலாம். இவற்றை விடக் கல்லாதோரின் சில பழக்க வழக்கங்கள், பாஷைப் பிரயோகங்கள் போன்றவற்றைத் தமது வருங்கால வாரிசுகள் பின்பற்றுவதைக் தடுக்கும் வகையிலும் இப்பிரிவுகள் அமையலாம்.

## தோல்வி, விரக்தி, தாழ்வு மனப்பான்மை

வாழ்க்கையிலே நிகழ வேண்டும் என்று எதிர்பார்த்த காரியங்கள் நிகழாது போகும் போது ஏற்படுகின்ற தோல்வி மனதிலே ஒருவித விரக்தியை ஏற்படுத்துகின்றது. வெற்றியடைந்தவர்களுடன் தமது தோல்வியை அடிக்கடி ஒப்பிட்டுப் பார்த்து தம்மைத் தாமே இவர்கள் தாழ்த்திக் கொள்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார்கள். ஒருவித தாழ்வு மனப்பான்மை நிலைக்கு மனிதன் உட்படுத்தப்படுகிறான். தோல்விகள் அதிகரிக்கும்போது இத்தகைய தாழ்வு மனப்பான்மையும் அதிகரிக்கிறது. இங்கு வெற்றியடைந்தவர்களுடன் தோல்வியடைந்தவர்கள் சேர்ந்து வாழக் கூச்சப்படுகிறார்கள். எனவே இவர்கள் பிரிந்து வாழ முற்படுகிறார்கள்.

கல்வி, பொருளாதார சமூக ரீதியான ஏற்றத்தாழ்வுகள் ஏற்படும் போதும் அவற்றால் பாதிப்புறும் மக்கள் ஒரு வகையான தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாகிறார்கள். தம்மிலும் உயர்ந்தோருடன் சேர்ந்து வாழ விரும்பாது, பிரிந்து வாழத் தலைப்படுகிறார்கள். அதுமட்டுமன்றி மற்றவர்களிடமிருந்து தம்மைப் பிரித்துக் காட்டும் நடவடிக்கைகளிலும் ஈடுபடத் தொடங்கிறார்கள். வித்தியாசமான துறைகளில் ஏதாவது காரியங்களைச் சாதிக்க வேண்டும் என்று எண்ணி எதையாவது புதிதாகச் செய்ய முயல்கிறார்கள். சில நல்ல காரியங்களாக அமையும், சில தீங்குகளை விளைவிக்கும். சிலர் தமது நடை, உடை பாவனைகளில் தம்மை மற்றவர்களிலிருந்து பிரித்துக் காட்டி நிற்பர், இதுவும் ஒருவகை உளரீதியான பிரிவாகும். வித்தியாசமான உடைகளை அணிதல், தாடி வளர்த்தல் போன்ற நடவடிக்கைகள் இதற்கு உதாரணமாகும். இவ்வாறு தம்மை மற்றவர்களிடமிருந்து பிரித்து வாழ்வதன் மூலம் தமது தோல்விகளின் ஏமாற்றங்களின் தாக்கத்தைத் தாங்கி நிற்பர்.

அறிந்தோ அறியாமலோ ஏதாவது குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு அவை வெளி உலகத்துக்குத் தெரிந்து விடும்போது அவற்றைச் செய்தவர்களுக்கு இயல்பாகவே ஒருவித குற்ற உணர்வு ஏற்படுவது இயற்கை. எல்லோருக்கும் இது ஏற்பட முடியாது. செய்த குற்றத்தைக் குற்றம் என்று ஏற்றுக் கொள்ளும் மனோபாவம் உள்ளவர்களுக்கு இத்தகைய உணர்வு ஏற்படவே செய்யும். பழிவாங்கும் நோக்குடன் அதனைச் செய்திருந்தாலும், தவிர்க்க முடியாத நிலையில் அதனைச் செய்திருந்தாலும் சமூகத்தின் கண்களுக்கு முன்னால் தாம் குற்றவாளி என்ற உணர்வு மேலிடுவதனால் இவ் வகைப்பட்டோரும் ஓரளவுக்கு சமூகத்திலிருந்து பிரிந்து வாழும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அவர்களாகவே பிரிந்து வாழ்கிறார்களா அல்லது சமூகம்தான் அவர்களைப் பிரித்து நோக்குகிறதா என்பது திட்டவட்டமாகத் தெளிவு படுத்த முடியாத விடயம். எனினும் சில இடங்களில் சமூகமே குற்றவாளிகளைப் பிரித்து வைக்கிறது. சில இடங்களில் குற்றவாளிகளே. ஒருவித குற்ற மனப்பான்மையுடன் சமூகத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து பிரிந்து வாழ்கிருர்கள். சில இடங்களில் இரண்டுமே தாக்கம் புரிவதைத் காணக்கூடியதாயுள்ளது.

தனிமனிதனுக வாழ்வதை விட சமூகத்துடன் சேர்ந்து வாழ்வதே பெரும் இன்பம் தரும். மேலே கூறப்பட்ட விதங்களில் பிரிந்து வாழ்வதனுல் தீய விளைவுகளே ஏற்படும். குறிப்பாக அந்நியப்படுத்தல் என்னும் நிலைக்கு மனிதன் தள்ளப்பட பிரிந்து வாழுதல் வழி செய்கிறது. மனிதனைப் பிரிந்து வாழத் தூண்டும் காரணிகளை மனிதன் வெல்வதன் மூலமே பிரிவினுல் ஏற்படும் தீய விளைவுகளைத் தடுக்கலாம்.

# காலத்தின் கலண்டர்

உறவுகள் ஜனனிக்க
பிரிவுகள் —
கருவறைச் சுவரில்
சிறையாகின்றன
இந்த
நியதியின் தீயில்
நிச்சயம் ஒருநாள்
அத்தனை உயிரும்
வெந்தே தீரும்
அமைதியை அடைகாத்த
பூமி எங்கும்
நிம்மதிகள்
பறிபோக
அச்சுறுத்தல்
பூதங்களின்
கொச்சை உறவுகள் —
விரக்தி சிலுவைகளை
விழிகளில் சுமந்து
எதிர்கால கனவுகள்
காகிதங்களாக
அக்னி சரித்திரங்கள்
அடையாளம்
இட்டுச் செல்லும் ......
அமைதி அகன்ற
வான வீதியில் —
அதிரடி விமான
இரைச்சல்கள்
பூதாகாரமான
விருட்சங்களாய்
பயங்கரப் பாய்
விரிக்கும் —
அதில் விழுந்து
துடிக்கும்
மேனி வயல்களில்
இறந்த பின்பும்
விடியலின்
வியர்வைகள் ......
அமைதியை
அடகு வைத்த
இரவுகள் இங்கே
அவசர கால அந்தரக்
கருக் கொண்டு
குறைப் பிரசவத்தின்
ஊரடங்குப் போஸ்டர்களை
சுமக்கின்றன — —
கால வியாபாரத்தில்
உயர் வாழ்வின்
நம்பிக்கைகளை
தொலைத்து விட்டு —
நிம்மதிகள்
தற்கொலை செய்ய
நீங்காமல் தொடரும்
தொடர்கதையாக
அவலங்கள் .. ...
காலமே இங்கு
சூனியமாக
அந்தக் காலத்தின்
கலண்டராய்
கனிந்து
கொண்டிருக்கிறோம்,

... நயினைகுலம் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ஒரு மல்லிகை வாடுகிறது...

மூதூர்: N. C. அருள்வரதன்

மாசி மாதத்துப் பனிப்புகார்களை அள்ளிச் சுமந்தபடி கடற் காற்று லாவகமாக உலாவிக் கொண்டிருந்தது. காலைக்கதிரவனின் ஒளிக்கீறல்கள் யன்னல் துவாரத்தினூடே ஊடுருவிக் கொண்டிருந்தன. தனது பரந்த மார்போடு தனது மகனை அணைத்துப் பிடித்தபடி உறங்கிக் கொண்டிருந்தான் சாரங்கன். கார்த்திகா, அவள் தான் சாரங்கனின் மனைவி. தன் காலைக் கருமங்களையெல்லாம் முடித்துவிட்டு தேனீர்க் கோப்பையோடு அவனருகே வந்திருந்தாள் "நல்லா விடிஞ்சு போட்டுது. எழும்பித் தேத்தண்ணியைக் குடியுங்கோ. அவனது தோள்களைப் பிடித்து எழுப்பினுள் கார்த்திக. அப்போதுதான் விழித்துக் கொண்ட சாரங்கன் குழந்தை போன்று அவளது மடியிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு உறங்குவது போன்று பாசாங்கு செய்தான். "சரி.. சரி ...... எழும்பித் தேத்தண்ணியைக் குடியுங்கோ. பிள்ளைக்குப் பால் காச்சிவிட்டு வாறன். "இப்படிப் படுத்தால் கடை திறக்கிறதில்லையே" அவனது தலையை வருடியபடி செல்லமாக அவனைக் கடிந்து கொண்டாள். "இன்றைக்கு ஒருநாள் கடை திறக்காட்டால் குடி முழுகியா போகும்! இந்த நாளில் வேலையும் குறைவுதானே. மனுஷனே வெளியில நடக்கப் பயம். எப்பிடித்தான் இந்தக் "கராச்சைக்" கொண்டு நடத்திறதோ தெரியல்லே." அலுத்துக் கொண்டான் சாரங்கன். "அப்படிச் சொல்லாதையுங்கோ! என்னதான் இருந்தாலும் நாங்க மூணு வேளையும் எந்தக் குறையுமில்லாமற் சாப்பிடுறதோ அல்லது நாலுபேர் நம்மையும் மனுஷரெண்டு மதிக்கப் பண்ணிறதோ எல்லாமே "அதின்ர" உதவிதான். என்ன செய்யிறது காலம் கெட்டுக் கிடக்குது. ஆண்டவன்தான் இதுக்கு ஒரு நல்ல வழியைக் காட்ட வேணும்." அவள் அவனுக்கு ஆறுதல் கூறினுள். கார்த்திகா சாரங்கனை மணந்து இரண்டு வருடங்கள் முடிந்து விட்டன. அவர்களின் ஆழ்ந்த அன்பிற்கு அடையாளம், அரவிந்தன். அவன்தான் அவர்களின் ஒரே மகன். கார்த்திகாவைப் பொறுத்தவரை சாரங்கன் அவளுக்கு எந்தக் குறையுமே வைக்கவில்லை. ஒரு பெண்ணுக்கு என்னென்ன தேவையோ அதனைத் தெரிந்து வைத்தவன் போன்று அவன் நடந்து கொண்டான். அவளும் அவனை முழுமையாகப் புரிந்தவளாக அவனது மனம் நோக என்றுமே நடந்து கொள்ள வில்லை. சில நேரங்களில் அவன் அவளிடம் "கார்த்தி! நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்குப் போறஞன். இந்த நாளையில வெளியில போயிட்டு வீட்டுக்குத் திரும்பிஞல்தான் உண்மை. அந்த அளவுக்கு நிலமை மோசமாய்ப் போட்டுது. சிலவேளை எனக்குத்தான் ஏதும் நடந்து போஞலும் நம்ம மகனை நல்லபடியா நீதான் உரு வாக்க வேணும். உனக்குத் தேவையான பணத்தை பேங்கில போட்டிருக்கிறன்" அவன் இப்படித் தொடரும்போது அவள் அவனது வாயைத் தனது கைகளால் மூடிக்கொண்டு "வேற கதை இல்லையெண்டால் சும்மா இருங்கோ வீணு எதை எதை யோ கதைக்காதைங்கோ" அவள் உண்மையாகவே அவனைக் கடிந்து கொள்வாள். அவன் அதனையும் ரசித்து மகிழ்வான். பொழுது நன்ருகப் புலர்ந்து விட்டது. சாரங்கன் காலைச்சாப் பாட்டை முடித்து விட்டு சைக்கிளைத் தள்ளியபடி "கார்த்தி! நான் வாறன்" அவள் மகனோடு வந்தாள்.

"போயிட்டு வாங்க ... "மகன் அப்பாக்கு ஆய் தாங்கோ... டட்டா" ... படலை வரையும் சென்று அவனை வழியனுப்பி விட்டு வந்தாள். இது அவளது வழமையான பழக்கமும் கூட, அவன் வேலை முடிந்து வரும் வரையும் அவளுக்கு நிம்மதியே இருப்பதில்லை. மனிதன் நிம்மதியாக நடமாட முடியாத கால மென எல்லோரும் உணர்ந்து விட்டதால் அவளையும் அந்த வேதனை வாட்டுவது ஆச்சரியப்பட வேண்டியதொன்றல்ல, திண்ணையோரமாகக் கிடந்த கட்டையிலே இருந்தாள் கார்த் திகா. அவளது மகன் அரவிந்தன் முற்றத்து மணலிலே விளை யாடிக் கொண்டிருந்தான். கார்த்திகாவின் குடும்பத்தைப் பொறுத்தவரை அவள் இரண்டு ஆண் சகோதரங்களையும் மூன்று பெண் சகோதரங்களையும் முன்விட்டு ஐந்தாவதாப் பிறந் தவள். சகோதரங்கள் எல்லோருமே கரையேறி விட்டார்கள். இவளும் மன நிறைவான ஒரு வாழ்க்கையைப் பெற்று விட் டாள். மற்றச் சகோதரங்களை விட அவள் எந்த வகையிலும் வாழ்வில் தாழ்ந்து விடும் அளவிற்கு அவளை சாரங்கன் எந்தக் குறையுமே தெரியாமல் வைத்திருப்பது அவளது பெற்ருேருக்கு மட்டுமல்ல சகோதரங்களுக்கும் அளவற்ற மகிழ்ச்சி. சாரங்க னைப் பொறுத்தவரை அவன் நல்ல உழைப்பாளி. ஆரம்பத் திலே ஒரு 'கராச்சில்" தொழிலாளியாக இருந்து இன்று பத் துப் பதினைந்து பேரைக் கொண்ட ஒரு சுமாரான கராச்சின் உரிமையாளன். ஆஞல் எந்த நேரத்திலும் தொழிலாளி முத லாளி என்கிற ஏற்றத் தாழ்வோ அன்றி அதனிலும் கீழ்த்தர மான பாகுபாடுகளோ அவனை எந்த வகையிலும் அடிமைப் படுத்தவில்லை என்பது மட்டும் அவனது சகதொழில் நண்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கும் அவனுடன் நெருங்கிய தொடர்புடையவர்களும் அறிந்த உண்மை.

கடற்காற்று குழு குழுவென்று வீசிக்கொண்டிருந்தது. சுவர்க்கடிகாரம் பன்னிரெண்டு முறை அடித்து விட்டு அமைதியாக இருக்கிறது. கார்த்திகா மகனுக்குச் சாப்பாடு கொடுத்து விட்டு சாரங்கனை எதிர் பார்த்துக் காத்திருக்கிருள். இன்னும் அரைமணி நேரத்தில் அவன் வருவது வழக்கம். வேலை அதிகமென்ருல் அங்கு வேலை செய்கின்ற யாரையாவது அனுப்பி சாப்பாடு எடுப்பான். அன்று இரண்டு மணிக்கு மேலாகியும் ஒருவரும் வராதது அவளுக்கு ஏதோ போன்றிருந்தது. இதனிடையே நகரைக் கலக்குகின்ற வழமையான வெடிச் சத்தங்களும் இடையிடையே கேட்டன. அவளால் எதையுமே செய்ய முடியாமலிருந்தது. தூரத்தே ரங்கன் அவன்தான் சாரங்கனுக்கு சாப்பாடு கொண்டு போகும் பெடியன் சைக்கிளில் வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதில் அவளுக்கு ஒருவித ஆறுதல். ஆனால் வந்தவன் ஒன்றுமே பேசாது ஊமையாகி நின்றது அவளுக்கு என்னவோ ஏதோ போன்றிருந்தது. ''தம்பி! அண்ணர் வரவில்லையா? ஆழமான கிணற்றிலிருந்து வெளிப்படும் தொனியிலே அவளது குரல் வெளிப்பட்டு வந்தது. ''அக்கா! அண்ணரை ... அவன் சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்காமல் விம்மி விம்மி அழுதான். அவளுக்கு எல்லாமே புரிந்து விட்டது. அடுத்த விநாடி அவளுக்கு என்ன நடந்ததென்றே தெரியாது. ஊர் கூடிவிட்டது. சாரங்கனின் இறுதிக் கிரிகைக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அரும்பாகி மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருந்த அவன் வாழ்வு கருகிச் சோர்ந்து விட்டது. மாலை வானொலி ''பயங்கரவாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்'' என்கிற செய்தியை அலறிக் கொண்டிருந்தது. எதைப்பற்றியும் அறிந்திராத பரிதாபத்திற்குரிய அந்த உடல் பயங்கரவாதி என்ற பட்டப்பெயருடன் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தது.

## கருத்துக்குவியல் பாராட்டப்படுவோர்.

S. A. பிரேமன் சுன்னாகம் செல்வி. மேரிகிரேஸ் கிளிநகர்
செல்வி. நா. செலஸ்ரினு, நெடுந்தீவு ஜெயந்தி யேக்கப் நெடுந்தீவு
வேதநாயகம், அரியாலை, மஞ்சுளா யோசல், யாழ்ப்பாணம்.
தோமஸ் இராசேஸ்வரி நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பதில்கள்

தருபவர்: M. நட்சத்திரம், O. M. I. ; B. Th—

**கேள்வி:** ஒரு குடும்பம் சந்தோசமாக, ஒற்றுமையுடன் வாழும் போது அக் குடும்பத்திற்கு எதிராகச் சதிசெய்து, பிரிவை ஏற்படுத்தி சமுதாயத்தினின்று இழிவாகக் கருதி வருவோரைப் பற்றி "நானே" நீ என்ன சொல்கின்றாய்?

ஞா. செல்ஸ்ரீனு
நெடுந்தீவு.

இவர்கள் அடிமட்டத்திலே பொறாமையினால் நசுக்கப்பட்டு வாழ்கின்றவர்கள். தங்கள் தோல்விகளைக் கண்டு விரக்தி மனப்பான்மை கொண்டவர்கள். அயலவனுடைய உயர்விலும் நிறைவிலும் மகிழ்ச்சி காணத் தெரியாத முதிர்ச்சியற்றவர்கள். சுயநலவாதிகள். தங்களது வாழ்விற்கே சமாதி கட்டும் பச்சோந்திகள். வரண்ட சிந்தனைகளையும், தாழ்ந்த எண்ணங்களையும், குறுகிய நெறி முறைகளையும் கொண்டவர்கள்

இந்த மனோநிலையுடன் வாழ்கின்றவர்கள் அல்லது அயலவனைக் கணிக்கின்றவர்கள் அல்லது தப்பாக அவர்களை எடை போடுகின்றவர்கள் உண்மையிலேயே மனநோயாளர்கள். இவர்கள் இந்நோயிலிருந்து விடுபடுவதற்கு முழுமனிதர்களாக மாறுவதற்கு தங்கள் கீழ்த்தரமான சிறுமைத்தனமுள்ள சிந்தனைகளை உடனே விட்டுவிட வேண்டும். அல்லது நோயாளர்களாகவே தொடர்ந்தும் வாழ்வார்கள். வளர்வார்கள். மற்றவர்களையும் நோயாளர் ஆக்குவார்கள்.

**கேள்வி:** சமுதாய வம்புகளில் ஈடுபட்டு ஆவலாதி மூலம் இளைய தலைமுறைகளின் வாழ்வைக் குட்டிச் சுவராக்கி, மொட்டைக்கடிதங்கள் மூலம் மற்றவர்களை விமர்சிக்கும் நபர்களைப்பற்றி 'நானே' என்ன நினைக்கிறாய்?

ஜே. ஜெயந்தி.
நெடுந்தீவு.

நீங்கள் விபரிக்கின்ற அத்தனை சமுதாயச் சீர்கேடுகளுக்கும் காலாகவிருப்பவர்கள் உண்மையிலேயே விலாசமில்லாத மொட்டையர்கள். முதுகெலும்பில்லாத புழுக்கள். நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்திறனுமின்றி வஞ்சனை செய்யும் கபட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமுள்ளவர்கள். குள்ளநரிக் கூட்டங்கள், இவர்களது வாழ்வு மலராமலே மொட்டையாகி விடுகின்றது.

இவர்கள் இந்த குறுகிய வட்டத்துள் இருந்து வெளியே வரவேண்டும். தங்கள் நேர்மையற்ற செயல்களைக் கைவிட வேண்டும். நேரிய சிந்தனைகளை வளர்க்க வேண்டும். தங்களதும் அயலவர்களினதும் மானம் காக்கும் தோழர்களாக மாற வேண்டும். அயலவன் மனம் புண்படும் போது தன் மனமும் புண்படுகின்றது என்று சிந்திக்கின்ற ஆற்றலில் நிலைக்க வேண்டும். இதுவே இவர்களை வாழ்விற்குக் கொண்டு வரும் ஏணிப் படியாக அமையும் இல்லாவிடில் இவர்களுக்கு வாழ்வின் அர்த்தமே புரியாத தொடர் கதையாக விருக்கும். உண்மையே என்றும் வெல்லும்.

கேள்வி: "உறவுகளால் இணையும் அனைவரும் பிரிவை எதிர் நோக்குபவர்களே", பிரிவோம், தவிப்போம் எனத் தெரிந்தும் மனித உள்ளங்கள் இணைப்பைப் புறக்கணிப்பதில்லையே! 'நானே' இதுஏன்?

நா. தமிழ்ச்செல்வி, யாழ்ப்பாணம்.

"உறவு என்றொரு சொல்லிருந்தால் பிரிவு என்றொரு பொருளிருக்கும்" மனித உறவுகள் அத்தனையும் சேர்த்தல் பிரிதல் என்ற கூட்டு இணைப்பிலே தங்கியுள்ளன. மனிதன் தனித்து வாழ முடியாதவன். ஆகையால் அவன் உறவைத் தேடுகிறான். அன்பிற்காக அலைகின்றான். தோழமைக்காக ஏங்குகின்றான். எப்பொழுதும் யாருடனாவது இருக்க வேண்டுமென்பதே அவனது அடிப்படை ஏக்கப் பெருமூச்சு.

அவனது இந்த முயற்சியில் பிரிவும் அவனைச் சந்திக்கின்றது. அப் பிரிவு தனிமைக்கு அவனை இட்டுச் செல்வதால் அவன் வாடுகின்றான் - வதங்குகின்றான் - ஒரு பொருளிலும் முயற்சியிலும் பற்றற்றவனாக மாறுகின்றான். ஆனால் இவற்றுக்காக அவன் உறவை விலக்கி விடலாமா? இல்லை. பிரிந்து மீண்டும் சேரும் போது அன்பு ஆழமாகின்றது. நிம்மதி நிலைக்கின்றது. பிரிவுகளை நிரந்தரமாக மாறவிடாமல் பிரிந்தவர்கள் பிரிகின்றவர்கள் சேர்ந்திட முயற்சிக்க வேண்டும் பிரிவிலும் உறவு வளர்கின்றது. அன்பு மலர்கின்றது. எனவே பிரிவுகள் வரும்போது அவை சிலவேளைகளில் நன்மைக்கே வருகின்றன வென்றும், நாம் பிரிந்தால் கூடிய விரைவில் மீண்டும் இணைந்திடுவோம் என்ற உயர்ந்த எண்ணத்துடனும் பிரிவுகள் கொண்டு வருகின்றன. மனச் சோர்வுகளை, இதய வேதனைகளை, விபரிக்க முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாச் சுமைகளை, நிறுக்கமுடியாக் கண்ணீர்களை ஒருமாதிரி மனிதர்களாகிய நாம் சமாளிக்கத் தெண்டிக்க வேண்டும்.

"இரவும் வரும் பகலும் வரும் உலகம் ஒன்றுதான்
உறவும் வரும் பிரிவும் வரும் வாழ்வும் ஒன்றுதான்"

கேள்வி: கணவன் வெளிநாட்டிலும் மனைவி வீட்டிலும் அல்லது மனைவி வெளிநாட்டிலும் கணவன் வீட்டிலும் நீண்ட இடைவெளிகளில் வாழும்போது குடும்பச் சீரழிவுகளும் அத்தோடு அங்கு அல்லது இங்கு சில ஒழுக்கக் கேடான செயல்களில் அவர்களை ஈடுபடவும் தூண்டுகின்றது. இச்சூழ்நிலையில் அவர்கள் பிரிந்திருப்பது நல்லதா?

வில்வராஜன், — மதுரங்குளி.

நீங்கள் இக்கேள்வி மூலமாக வெளிக்காட்டும் சில வாழ்க்கைப் பிரச்சினைகள் இத்தகைய சூழ்நிலையில் சில சமயங்களில் உருவாகலாம். என்றாலும் எல்லோரது வாழ்க்கையும் இப்படித்தான் என்று நினைப்பதும் முடிவு செய்வதும் மிகவும் தவறாகும். வெளிநாட்டில் திரவியம் தேடுவதற்காக பிரிந்து சென்றிருக்கும் கணவனோ அல்லது மனைவியோ கெட்டவர்கள் - ஒழுக்கம் கெட்டவர்கள் - பிரமாணிக்க மற்றவர்கள் என்ற முடிவுக்கு திடீரென்று வருவது முறையல்ல. கணவன் மனைவியிடத்திலே உண்மையான அன்பு வாழ்க்கை - தியாக வாழ்க்கை - அர்ப்பண வாழ்க்கை இருந்தால் அவர்கள் எத்தனை மைல்கள் அப்பால் இருந்தாலும் ஒரு நாளும் தவறமாட்டார்கள்.

இருந்தும் அவர்கள் அவ்வாறு பலவீனமான வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டவர்கள் என்றால் வெளிநாடு போய்த்தான் அப்படிச் செய்கின்றார்கள் என்று சொல்லவும் முடியாது. ஏனென்றால் அப்படிப்பட்டவர்கள் ஒன்றித்து (இங்கே) வாழ்ந்து கொண்டே வாழ்க்கையில் தவறலாம். ஒழுக்கக் கேடான செயல்களில் ஈடுபடலாம். வெளிநாடு போய்த்தான் கெடவேண்டுமென்பதல்ல.

எவ்வாறாயினும் நீங்கள் எடுத்துக்காட்டிய வாழ்க்கைப் பிரச்சினைகள் உண்மையாகவே அவர்களது குடும்ப வாழ்வை, ஒழுக்கத்தை பாதிக்குமானால் பிரிந்திருப்பதைத் தவிர்த்துக் கொள்ளல் நன்று. ஏனென்றால் மனிதன் மனிதனல்லவா? திட்டம் போட்டு அவன் தவறாது விட்டாலும் சூழ்நிலைகள் அவனை வெற்றி கொண்டு விடலாம். அந்த வகையிலும் உளவியல் அடிப்படையிலும் அன்பு பகிர்ந்து வாழப்பட வேண்டிய காலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்திருப்பது நிம்மதியைக் குறைக்கலாம். பிரிந்திருந்து கண்ணீர் வடித்து பலவாறு (தவருக) சிந்திப்பதிலும் பார்க்க இணைந்திருந்து மகிழ்ந்திருப்பது நல்லதல்லவா. பணமோகம் வாழ்க்கையின் சீரழிவில் முடிந்து விடக்கூடாது.

கேள்வி: "பழி வாங்கல் நன்று" என்றும் "பழிவாங்கக்கூடாது" என்றும் கடந்த இதழில் கருத்துக்கள் சொல்லப்பட்டன. இப்படியான வேறுபட்ட கருத்துக்கள் வாசகர் மத்தியிலே குழப்பத்தை ஏற்படுத்தாதா?

T. வசந்தி, — சோண்டாவில்.

உங்கள் கேள்வி மிகவும் கருத்தாழம் மிக்கது. இருந்தும் இத்தகைய கருத்துக்கள் யாவும் வாசகர்களின் கருத்துக்களே இப்படியான கருத்துக்கள் கருத்துக்களாகவே அமையட்டும். அவற்றை அப்படியே பின்பற்றவேண்டுமென்பதும் அல்ல.

எனது பதிலை விட, உங்கள் சிக்கலைப் போகுவதற்கு 'நான்' ஆசிரியரின் உரையைப் படித்தால் அவை உங்களுக்கு மேலும் துணை நிற்கலாம். ஆழமாக வாசித்துப் பாருங்கள்.

# இலக்கியமும் உளவியலும்
## இணைந்த அரங்கின் கண்ணோட்டம்

தொகுப்பு: A. F. லொசிங்டன் A. சத்தியசீலன்

யாழ் இலக்கிய வட்டமும் நான் சஞ்சிகையினரும் இணைந்து நடத்திய கருத்தரங்கு பங்குனி 31-ல் மறைக்கல்வி நிலையத்தில் எளிமையும் இனிமையுமாக நடாத்தப்பட்டது. அழைப்பிதழ் கிடைக்கத் தாமதித்த போதும் அதிக வாசகர்கள். எழுத்தாளர்கள், அபிமானிகளால் மண்டபம் நிறைந்திருந்தது.

சஞ்சிகைக் குழுவினரின் இறைவணக்க பஜனையுடன் 'நான்' இணையாசிரியர் வண. டேமியன் அடிகள் யாவரையும் வரவேற்று பிரதம விருந்தினராக வருகை தந்த வடமாநில அமல மரித்தியாகிகள் சபைத் தலைவர் வண. லூயீஸ் பொன்னையா அடிகளாரை மங்கள விளக்கேற்றி வைக்க அழைத்தார். அவரோடு கூடி யாழ் பேராலயப் பங்குத் தந்தை ஜெபநேசன் அடிகளாரும் யாழ். பரியோவான் கல்லூரி அதிபர். ஆனந்தராஜா அவர்களும் ஒளியேற்றி விழாவினைத் தொடக்கி வைக்க ஆசியுரை அருளினர் அ. ம. தி. தலைவர். அருட்திரு. லூயீஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னையா அடிகளார். "யாழ் இலக்கிய வட்டமும் 'நான்' உளவியல் சஞ்சிகையும் இணைந்து நடாத்தும் இந்த விழாவின் மூலம் இன்றைய சமூகத்திற்கு வழி காட்டும் பல பணிகளை கொடுத்துதவ முடியும் என்று மகிழ்ச்சியோடு வாழ்த்தினுர்.

விழாத் தலைவர் பேராசிரிய பங்குத் தந்தை ஜெபநேசன் அடிகளார் தனது தலைமையுரையில் "விரக்தியுற்ற இளைய தலைமுறையினரின் எதிர்காலம் நல் வழியில் அமைய உளமாற்ற நலமே, மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்குதவும் இளைஞர்களின் செயலுடன் அனுபவஸ்தரின் அறிவும் கலந்து அமைவது, திடமான திட்டமிட்ட சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும். எதிலும் இளைஞர்கள் முன்னேக்கிச் செல்வதற்கு இந்த அரங்கே சான்ருக உள்ளது." என்று கூறி கவியரங்கை தலைமை தாங்க சேரனை அழைத்தார். சேரன் தனது கவித்திறனுல் அரங்கை தன் வசமாக்கி, மனிதாபிமானத்துக்கு அழைப்பு விடுத்தார். முல்லைக் கவியின் கவியை சுவைத்த போது சிதறிய சில வரிகள்.

"நானொரு மனிதன்
நானொரு தமிழன்
நான் மனிதாபிமான முள்ளவன்
இன்று அதனைத் தேடுகிறேன்"

அந்த நாளில் கவிகூற பொன்னென்பார்
இந்த நாளில் கவி கூற விசர் என்பார்"

அடுத்து கவிபாட வளவை வளவனை அழைத்தார், சேரன்.

"யானை கட்டி போரடித்த காலம் மாறி
ஆம்காட் பவனிவந்து வீடுடைக்கும் காலமிது"

என்று புதுக்கவிதைகளால் பலகதை கூறினுர். இருவரும் கவி பூங்காவில் மனிதாபிமானத்தை தேடி அலைந்ததை ரசித்த உள்ளங்கள் பல.

'நான்' உங்கள் வீட்டுப் பிள்ளை என 11-வது ஆண்டு வளர்ச்சிக் கதையினை விளக்கிய பாங்கு மழலைக்குரலால் எல்லோர் மனதையும் கவர்ந்து கொண்டாள் செல்வி. சுருஷினி.

செம்பியின் செல்வன் செப்பிய வார்த்தை இன்றைய நிலையில் இளம் தலைமுறையினருக்கு பல அறிவுரையாக அமைந்தது. "எழுத்து வெளியீடுகளை இனங்கண்டு வளர்க்க வேண்டும். இதன் மூலம் பல புதிய எழுத்தாளர், புதிய சிந்தனைகள் மறைந்து விடும் பலவற்றையும் முன்னுக்கு கொண்டுவர முயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கும்'' என தனது மதிப்பீட்டையும் விமர்சனத்தையும் அளித்து, ''நான் சஞ்சிகையின் உள்ளடக்கம் மனிதன் கொண்டிருக்க வேண்டிய அடிப்படை உளவியல் கருத்துக்களை கொண்டுள்ளது. வியாபார நோக்கின்றி இன்றைய கால ஓட்டத்திற்கேற்ப சிந்திக்கத் தூண்டும் 'நான்' சிறப்பிதழாக அமைகிறது. அறிவுக்கு துணை நிற்கும் நூலைத் தெரிவு செய்யும் போது தரம் காணுங்கள். இனம் கண்டு பலரும் அதன் பயன் பெற பரவலான முன்னேற்றத்துக்கு ஈழத்து வெளியீடுகளுக்கு ஊக்கம் கொடுங்கள், 'நான்' பங்களிப்பு நமது சமூகத்திற்கு மிகவும் பயனுள்ளது." என பல உதாரணங்களினால் உள்ளடக்கத்தினை உரித்துக் காட்டினர்.

ஆனந்தமானவர். அற்புதமானவர் என பலராலும் கூறப்படும் பரியோவான் அதிபர் ஆனந்தராஜா சென்ற ஆண்டு சிறப்பிதழ்களையும் துணைக்கெடுத்து விமர்சித்தார். ''சகல பருவத்தினருக்கும் பயன் நிறைந்த உள வளத்துக்கு ஏற்ற நூலாகத் திகழ்வதும், பள்ளி மாணவர் முதல் பல்கலைக் கழகத்தினரும் படித்துப் பயன் படுத்த தமிழில் உளவியல் வெளிப்பாடுகளாக 11-வது ஆண்டைக் கடப்பது பெரும் சாதனை தான். இவை சகலரின் வாழ்க்கைக்கு துணை நூலாகத் திகழ்வதுபோல் சிறுவர்களும் புரிந்து கொள்ள சிறு தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கி வந்தால் பள்ளி மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமையும்'' என்ற வேண்டுகோளோடு தனது உரையை முடித்தார்.

அடுத்து மௌலவி. K. H. M. காலிதீன், தமிழ் இலக்கிய வளர்ச்சி இன்று நம் நாட்டில் யதார்த்த ரீதியில் சிந்தனை சக்திக்குட்பட்ட ஒப்பீட்டளவில் கூறுவதாயின் அது பின்தங்கிய நிலையில் தான் உள்ளது. என்றே கூறவேண்டும் என கூறினர். ஆசியா முழுவதும் பரந்ததாக உள்ள தமிழ் இலக்கிய மன்றங்கள் இலக்கியத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கு முயற்சி செய்கின்றன. முற்கால இலக்கியங்கள், காப்பியங்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஓர் உச்சக் கட்டத்தை அடைந்தன. அவற்றுடன் இக்கால இலக்கிய படைப்புகள் எந்தளவிற்கு மேம்பாட்டை நோக்கி படைக்கப்படுகின்றனவோ அந்தளவிற்கு அவை வளர்ச்சியடைய முடியும் என தனது அபிப்பிராயத்தினையும் கூறி வைத்தார்.

'நான்' ஆசிரியர் வண. வின்சன் பற்றிக் அடிகளார் தனதுரையில் ''தான் யார்?' நான் மமதை, ஆணவம், அகங்காரம் உடையவன், இவை அழிய வேண்டும். இவை அழிந்தால்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வாழ முடியும். நமது ஆளுமை வளர வேண்டும். அதற்கான கருத்துக்களை தருவதுதான் 'நான்' மஞ்சரியின் பணியாகும். ஆளுமையில் வளரும் 'நான்' வளர்ந்தால்தான் நாம் வளர முடியும். இதற்கான ஒற்றுமை பலத்தை எல்லோரிடம் எதிர்பார்ப்பதாக கூறி தனது உரையை முடித்தார்.

இறுதியில் யாழ் இலக்கியப் பேரவைச் செயலாளர் யாழ்வாணன் நன்றியோடு இனிதே நிறைவெய்தியது,

# வாசகர் பூங்கா



## நானுக்கு நிகர் நானே

பங்குனி சித்திரை கண்ணுற்றேன்
ஆக்கங்கள் அத்தனையும்
அரியகலைப் பொக்கிஷங்கள்
"பழிவாங்கல்" பரிசுக் கவிநன்று
மௌனங்கள் கலையும் போது
மனங்கள் மகிழுகின்றன
"தவறுகள் என்றும் தவறுகளே"



தத்துவத்தை விளக்கின
"மேகங்கள் கலைகின்றன"
மேன்மையாகச் சிந்தனை யூட்டின
கவிதைகள் தரமுள்ளவை
கட்டுரைகள் பிரமாதம்
மொத்தத்தில் நானுக்கே நிகர் நானே

வி. மைக்கல் கொலின்
திருமலை.

# ஒரு திங்களில் இருமலர்...!

"நான்" பழிக்குப் பழி இதழில்" "உருளுகின்ற உலகில் மருளுகின்ற மனிதன்" ...... ஆசிரியர் தலையங்கத்தினுள் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களும் அடக்கம் பெறுகின்றதை அவதானிக்க முடிகின்றது. எமது அன்றாட நிகழ்ச்சிகளும் திரைப்படங்கள் போன்ற மக்கள் தொடர்புச் சாதனங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் பழிக்குப்பழி வாங்கும் செயற்பாட்டை நியாயப் படுத்துவதாகத் தோன்றுகின்றன. என்பது அடிப்படையான உண்மையே.

"விரக்தியும் அதன் விளைவுகளும்," "அன்பில்லா உலகில் மனித நோவுகள்", "பழி வாங்கல்", "உளவியலாளர் வரிசையில்" ...... குறிப்பிட்ட இந்த நான்கு கட்டுரைகளும்... படிக்கின்ற ஒவ்வொரு மனிதரையும் நன்கு சிந்திக்க வைத்துப் பூரண மனிதனுகச் செயல் புரிய வைக்கத் தகுந்த ஆழ்ந்த கருத்துக்களுடன் காணப்படுகின்றன.

இன்று ஈழத்தில் வெளியாகும் தரமான சஞ்சிகைகளான 'மல்லிகை", "தாயகம்'', "தாரகை'', "தமிழ் ஒலி", "சிரித்திரன்", "களம்'', "சுமை தாங்கி'' போன்ற இவைகளிடையே "நான்'' சஞ்சிகை சகல சஞ்சிகைகளிநின்றும் வேறுபட்டு உளவியல் ரீதியான சமூக அணுகு முறைகளின் தனித்துவதொரு இடத்தைப் பெற்று விளங்குகின்றதென்பதை யாராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

இன்றைய சமுதாயத்தின் போக்கில் ஒவ்வொரு மனித உள்ளங்களினதும் உணர்வுகளைப் புரிந்து கொண்டு சமூகத்தின் மேம்பாட்டுக்காக உழைக்கும் பணியில் தன்னையே அர்ப்பணித்து வாழும் "நான்" மலர் மாதத்திற்கு இருதடவைகளேனும் மலரவேண்டிய அவசியத்தில் இருக்கையில் தொடர்ந்தும் இரு திங்கள் ஏடாக வெளிவந்து கொண்டிருப்பது வரவேற்கக் கூடிய செயலல்ல.

சி. எஸ். பிரேமினி
அரியாலை.

## பாராட்டுக்கள்

திரு. சௌந்தரலிங்கம் அவர்கட்கு எனது மனப்பூர்வமான பாராட்டுதல்கள். இந்நாட்டின் இன்றைய துர்ப்பாக்கிய நிலை தனிமனிதனைப் பலவிதங்களிலும் விரக்திக்கு உள்ளாக்குகின்றது. நாட்டின் நிலை தவிர வேறு காரணங்களாலும் விரக்திக்குள்ளாகும் தனிமனிதனுல் அவன் வாழுகின்ற சமுதாயமும் பாதிக்கப்படுகின்ற நிலை ஏற்படுகின்றது. எனவே காலத்திற்கேற்ற வகையில் எழுதப்பட்டுள்ள கட்டுரை "விரக்தியும் அதன் விளைவுகளும்" என்ருல் அது மிகையல்ல. செம்மியன் செல்வனுக்கும் எனது பாராட்டுதல்கள்.

A. D. G' பீற்றர்
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகத்திலடி

என் ஒன்று விட்ட சகோதரனிடம் சென்ற "நான்" இத்ழைப் படிக்குமாறு கொடுத்தேன். அவன் அதை ஒருசில நிமிடங்கள் வரை புரட்டி விட்டு இதை வாசிக்க போர் அடிக்கிறது. இதைவிட வேறு புத்தகங்கள் இருந்தால் கொடு என்று முகத்தில் அடித்தாற் போல் தந்தான். நானோ "நான்" புத்தகத்தை வாரியணைத்து எடுத்து வந்து விட்டேன். ஏனெனில் என்னருமை "நானை" வெறுப்பவன் என்னை வெறுக்க மாட்டான் என்பதில் என்ன நிச்சயம்.

செல்வி. த. தர்மசாந்தி
வவுனியா.

## நீ பிரிந்தால்...

ஆண்டுக்கு ஆறு முறையென மலர்ந்தால்
ஆண்டுகள் சில கண்டு மாதங்கள் பல கண்டு
பைந்தமிழ்த் தேனை உள்ளகம் சுமந்து
பற்பல சுவைகள் ததும்பி நிற்கும்
கற்பனைத் திறன்மிகு கருத்தோடு
நறுமணம் வீசிடும் மலரே
நீ மலர்ந்தால் எம்மிதய மலர் மலரும்
நீ பிரிந்தால் எம்மிதய மலர் வாடும்.

அருள்
சுன்னாகம்.

## தேய்கின்ற நான்

பலரின் நடுவில் உன்னைக் கண்டேன்
நல்லுறவு மலர்ந்தது — நீ
என் மேல் பாச மழை பொழிந்தாய்
உன்னன்பு என்னை மலரவைத்தது
என் திறமைகளைப் பாராட்டினாய்
தன் நம்பிக்கை வளர்ந்தது
நீ தேய நான் வளர்ந்தேன்
உன் வார்த்தை என்னை வாழ வைத்தது
உன் தொடர்பு என்னை மகிழ வைத்தது

செல்வி. நிலா மரியாம்பிள்ளை
யாழ்ப்பாணம்.

## திடமான முடிவு

ஒவ்வொரு இதழையும் குறித்த ஒரு கருவிற்காய் ஒதுக்கிபதன் மூலம், இரு திங்கள் அக்கருவை இடைவிடாது சிந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்க வைத்து அதுபற்றி திடமான உறுதியான நம்பத் தகுந்த முடிவை ஏற்றுக் கொண்டு செய்யத் தகுந்த வழி வகுந்து விட்டாய். "மேகங்கள் கலைகின்றன" சிறுகதை, பழிவாங்குதல் நிகழும் என்ற அச்சத்தினால் அலைக்கழியும் ஓர் உள்ளத்தினைப் படம் பிடித்துக் காட்டியது. "படித்தாலும் பெயில் விடுவேன்" என்ற வரி முன்னுக்குப் பின் முரணாகத் தோன்றிய நிலையை, கௌரியின் மன அமைதியின்மையை புடமிட்டுக் காட்டி, கதையின் முழுக் கருவையும் ஒரே வரியில் அமைந்து விட்ட பெருமையைத் தேடிக் கொண்டது.

செல்வி. நா. தமிழ்ச்செல்வி

## தப்பிவிட்டார்

சென்ற இதழில் "மேகங்கள் கலைகின்றன" என்ற சிறுகதை இன்றைய பெண்களுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. பெண்களைப் பொறுத்தவரை அநேகமானோர் கௌரியைப் போலவே தம்மனதால் ஒருவரை விரும்பியதும் அவர் செய்யும் அத்தனை காரியங்களையும் தமக்காகவே செய்கிறார்கள் என்ற ஓர் தப்பான எண்ணத்தில் வாழ்கிறார்கள். இறுதியில் முழுப் பழியையும் ஆண்கள் மீது சுமத்துகிறார்கள். நல்லகாலம் இக்கதையில் விரிவுரையாளர் தப்பி விட்டார்.

அ. பிரான்சிகா
கொடிகாமம்

## ஏணிப் படிகள்

சிறிய எழுத்தாளன் என்ற முறையில் எனக்கு ஓர் அரங்கம் அமைத்துத் தந்த "நான்" சஞ்சிகைக்கு மிகுந்த கடமைப்பட்டுள்ளேன் நான் ஏறும் ஒவ்வொரு படிகளிலும் உன்னை மிகுந்த நன்றியுடன் நினைத்துக் கொள்வேன். நான் இங்கு ஒரு பத்திரிகை நிருபராகக் கடமையாற்றுகின்றேன்.

ஏ. ஜெ. கொன்ஸ்டன்ரைன், லண்டன்.

## குடும்பத்தின் வழிகாட்டி

84-ம் ஆண்டு 'நான்' தொகுப்பு படித்தோம். எமது குடும்ப வாழ்க்கைக்கு நல்ல வழிகாட்டி நூலாக பல அறிவுரை தந்து மகிழ்வித்தது. எம் வாழ்க்கைக்குத் தேவையான சகல அம்சங்களையும் உள் அடக்கியது சிறப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற வெளியீட்டின் அட்டைப்படம் வெகு ஜோர். அதனை வரைந்த "ரீமா"வுக்கு எமது பாராட்டுக்கள். அட்டைப்பட விளக்கமும் தந்தால் சுவையாக இருக்கும்.

வரே - நவா
உடுவில்.

ஆ-ர்: பல வாசகர்கள் 'நான்' மஞ்சரியை மாதாந்தம் காண ஆவல் உறுவதை உணர்கின்ரேம். ஆவலைப் பூர்த்தி செய்ய முயற்சிக்கின்ரேம். அதற்கான உங்கள் பங்களிப்பை எதிர்பார்த்தே மாத வெளியீட்டை தொடரக் காத்துள்ளோம். வெளியீடுகள் எப்படி முக்கியமோ அதுபோன்றே விற்பனையும் பரவலாக்கப்பட வேண்டும். அதற்கான பங்களிப்பை ஒவ்வொரு வாசகனும் பரவலாக 5 சந்தாதாரர்களை சேர்த்துக் தந்தால் விரைவில் உங்கள் ஆவல் பூர்த்தியாக வாய்ப்புண்டு.

# பேனு நண்பர் ...!

வசந்தி. சேனுதிராஜா
சைவப் பாடசாலை ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

பொழுது போக்கு:- பத்திரிகை வாசித்தல்,. வானெலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல்.

ஆர். எஸ். செல்வரத்தினம்
218/A, அல்வாய் வடக்கு.
அல்வாய்.


பொழுது போக்கு:- வெளிநாட்டு வானெலி ஒலிபரப்புகள் செவிமடுத்தல், சஞ்சிகைகள், எழுத்துத்துறை, பேனு நண்பர், தொடர்பு.

த. இளங்கோவன்
10ந் தரம்
கனிஸ்ட உயர்தர வித்தியாலயம்
வ/புதுக்குளம்
சாஸ்திரி கூளாங்குளம்
வவுனியா
வயது : 16
பொழுதுபோக்கு
வானெலி கேட்டல், பத்திரிகைகள் வாசித்தல், கதைப்புத்தகம் வாசித்தல் பொதுப்பணி என்பன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி இல: 21




குழம்பி வருபவை — 7—>, 10—>, 20 —>

2↓ 4↓ 12↓ 15↓ 23↓

இடமிருந்து வலம்:-

1. உலக நாடுகளில் தொல்லை கொடுக்கும் கடத்தல் பொருள்.
7. குதிரை போடும் சத்தத்தை இப்படி அழைப்பர்.
10. உங்கள் வீட்டிலும் இவற்றை அமைக்கலாம்.
13. அமைதியைக் குலைப்பது இதுவாகும்.
20. எது இல்லாவிட்டாலும் இதை கணவன், மனைவியிடம் எதிர் பார்ப்பான்.
29. அன்றைய அரசர் போராடியதும் இன்றைய இளைஞர் போராடுவதும் இதனைப் பெறவே.

மேலிருந்து கீழ்:-

1. இந்தப் பிரியர்கள் நாட்டுக்கே உதவார்கள்.
2. இறுதி ஊர்வலம் இங்கும் இடம் பெறுகின்றது.
4. மலரை இப்படியும் அழைப்பர்.
5. இல்வாழ்க்கை சிறப்புற நல்ல இது வேண்டும்.
12. இறைவனைப் புகழ இதனை இசைப்பர்.
15. இது தனக்குதவி என்று காந்தியடிகள் கூறினார்கள்.
23. உளவியல் நோக்கில் உன் குறை தீர்ப்பவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி முடிவுகள் இல: 20

இடமிருந்து வலம்

(1) தொகுப்பு
(2) பழிவாங்கல்
(3) லாங்மியூர்
(5) துர்க்கை
(19) விசர்

மேல் இருந்து கீழ்

(1) தொழிலாளர்
(6) பங்கு
(16) புங்கையூர்
(22) கர்வி
(26) பல்
(29) சதி

பரிசு பெறுபவர்: வே. அமலன்
மாங்காடு, தேத்தாதீவு
மட்டுநகர்

பரிசு அளிப்பவர்: கமலா இளங்கோவன்
குருநகர்

இங்கே வெட்டவும்

---

## 'நான்' உங்கள் தோழன்

* நீங்கள் பெற்ற இன்பத்தை உங்கள் நண்பர்களும் அனுபவிக்க.

* நீங்கள் உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ள

எனது/நண்பனின் பெயர் ..................................................

..................................................

முகவரி: ..................................................

..................................................

இத்தால் ............ வருட 'நான்' இதழுக்கான சந்தாவாக ரூபா .................... ஐ தபாற்கட்டளை காசுக்கட்டளை மூலம் அனுப்புகிறேன்,

கையொப்பம்

குறிப்பு:- பணம் பெறுபவர் 'நான்' ஆசிரியர்
பணம் பெறும் கந்தோர்: கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOR
TASTY

**BOMBAY SWEETS**

**VISIT**

# TULIPS

153, Main Street. Jaffna.

தேன்சுவை மிகு சிற்றுண்டி வகைகளுக்கும், மற்றும்
ஜெலிஐஸ்கிறீம், Fலூடா சர்பத், ஐஸ்கோப்பி
பலவித குளிர்பானங்களுக்கும் நாடுங்கள்.

# ரியூலிப்ஸ்

(ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்)

இவ்வாண்டு புதிய படைப்பு
வாவிருக்கும் 'நான்' வெளியீடுகள்.

## "உறவுகளின் ராகங்கள்"

(குடும்ப வாழ்க்கைக்கு நல்வழி காட்டும் நூல்)

## "மலருகின்ற மனமும் மகிழ்கின்ற மனிதனும்"

(சிறப்பு கட்டுரைகள்)

## "சிறுகதை தொகுப்பு"

(கமலா இளங்கோவன் எழுதியவை)

நான் மஞ்சரி வாசகர்கள், புத்தக விற்பனையாளர்கள் முன்கூட்டியே முதல் வெளிவரவுள்ள "உறவுகளின் ராகங்கள்" நூலை பெறப் பதிவு செய்து கொள்ளுங்கள், சகல பாகங்களிலும் "நான்" வெளியீடுகள் விநியோகிக்கும் விற்பனையாளருக்கு விசேட கழிவுகள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"NAAN" Psychological Magazine May - June 1985
O. M. I. Seminary, Columbuthurai.

# S. M. Fernando

## LEADING OPTICIANS & DENTAL TECHNICIANS

கண் பரிசோதித்து
கண்ணுடி கொடுப்பவர்களும்,
பல் கட்டுபவர்களும்.

**S. M. FERNANDO**
13, Mein Street,
( 1 - st Cross Street Junction. )
JAFFNA.

உங்கள் அந்திய காலக் கிரியைகளை சிறந்த முறையில், குறைந்த செலவில், நிறைந்த தரத்தில் பெற்றுக் கொள்வதற்கு யாழ் நகரில் நீண்ட காலமாகப் பிரசித்தி பெற்று விளங்கும் சிறந்த ஸ்தாபன .

## பிறைற் கவுஸ்
## அந்திய கால சேவை

எம்மிடம் :

**பெட்டிகள், கார், மலர்வளையங்கள், எம்பாமிங்.**

போன்ற சகல வசதிகளும் உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

பிறைற் கவுஸ் அந்தியகால சேவை,
69, பிரதான வீதி,
( 1ம் குறுக்கு சந்தி )
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org